மலர்-2 இதழ்-42 மே 16-31 2018 இலவச புத்தகம் www.aanmeegamalar.com

ஆன்மிகமலர் டிரஸ்ட் வெளியீடு

# ஆன்மிகமலர்

## மெயில் புக்

மாதமிருமுறை

ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

உலக வரலாற்றில் முதன்முறையாக இ-மெயிலில் வெளியிடப்படும் இதழ்




## நல்ல பிள்ளையை பெற்றால்

# சொர்கம் செல்லலாம்

# கர்மாவை சுமக்கும் வாகனங்கள்தான் நாம்

நம் சந்ததியருக்கு எதை சேர்த்து வைக்க வேண்டும். பாவத்தையா? புண்ணியத்தையா?

நாம் ஒவ்வொருவரும் செய்யும் பாவ, புண்ணியத்தின் பலனை கண்டிப்பாக நமது சந்ததியினர்தான் அனுபவிப்பார்கள் என்று புராணங்களில் நமது முன்னோர் கூறியுள்ளனர்.

அதாவது, நம் சந்ததிகள் நமது கர்மாவை சுமப்பவர்கள்...!

தற்போது நாமும் கூட, நமது முன்னோர்களின் கர்மாவை சுமந்துக் கொண்டுதான் இருக்கின்றோம்! ஆக நாம் எல்லாரும் ஒருவகையில் கர்மாவை சுமக்கும் வாகனங்களே..!!

நமது முன்னோர்களின் பாவ புண்ணியங்களின் விளைவுதான் நாம்..!

நமது பாவ புண்ணியங்களின் விளைவுகள் தான், நமது சந்ததிகள்...!

நம் தாத்தாக்கள், கொள்ளுத் தாத்தாக்களின் ஜீன், நம்மிடம் இருக்கிறது என்பதை விஞ்ஞானம் ஒப்புக்கொள்கிறது. அதனால்தான் மருத்துவர் கேட்கிறார் “இந்த நோய், உங்கள் அப்பா அம்மா தாத்தா பாட்டிக்கு இருந்ததா?’ என்று.



நோய் மட்டுமல்ல; பண்பு, அறிவு, குணம், ஞானம், நடை, உடை, பாவனை, செயல்பாடு, புத்தி சாலித்தனம் வெற்றி தோல்வி இவை எல்லாமும் வழிவழியாக சந்ததிகள் வழியே பயணிக்கிறது.

தாத்தா வழியாக வந்த நோய்க்கு நாம் மருந்து எடுத்துக்கொண்டு பரிகாரம் தேடுவது போல், அவர்கள் வழியாக வந்த நமது தீய அம்சங்களுக்கும் எதிர்மறைகளுக்கும் ஆன்மிகம் மூலம் நாம் தீர்வைத்தேடுகிறோம்.

நாம் செய்யும் தீவினையைக் கண்டவர் யாருமில்லை என்ற கற்பனையில் நாம் உலாவலாம்... ஆனால் நம்முள் இருப்பவன் மிக துல்லியமாக நாம் செய்யும் செயலை பதிவிட்டு காத்திருப்பான் காலத்திற்காக..

அவன் பதிவுகளை தக்க தருணத்தில் வெளியிடுவான். அந்த செயலின் நன்மை தீமையை நாம் அனுபவிக்க... இதை அறிந்து கொள்வதுதான் மெய்ஞ்ஞானம்.

நம் சந்ததிகள் நமது கர்மாவை சுமக்காமல் இருக்க நாம் நமது பிந்தைய தலைமுறை பயன்படும் வகையில் நாம் புண்ணியம் செய்தல் வேண்டும்.

ஆக என்ன செய்தால் எத்தனை தலை முறைக்கு புண்ணியம் என்பதைப் பார்ப்போம்...!

நாம் செய்யும் நற்காரியங்கள் எத்தனை தலை முறைக்கு சென்றடையும் என்பது குறித்து நமது முன்னோரே ஒரு சில வரைமுறை வகுத்துள்ளனர். அவற்றில் சில வற்றைப் பார்ப்போம்.

முடிந்த அளவு எந்தவித சுய பெருமையின்றியும், ஆடம்பரம் இன்றியும் நம் முன்னோர் சொன்ன செயலை அமைதியான முறையில் செய்தாலே பல புண்ணியங்கள் நமது தலைமுறைக்கு வந்து சேரும்.

- ❖ பட்டினியால் வருந்தும் ஏழைகளுக்கு உணவளித்தல் 3 தலைமுறைக்கு.
- ❖ புண்ணிய நதிகளில் நீராடுதல். 3 தலை முறைக்கு.
- ❖ திருக்கோயிலில் தீபம் ஏற்றுதல் 5 தலை முறைக்கு.
- ❖ அன்னதானம் செய்தல் 5 தலைமுறைக்கு
- ❖ ஏழைப்பெண்ணுக்குதிருமணம் செய்வித்தல் 5 தலைமுறைக்கு.
- ❖ பித்ரு கைங்கர்யங்களுக்குஉதவுவது 6 தலைமுறைக்கு.
- ❖ திருக்கோயில் புனர்நிர்மாணம் 7 தலை முறைக்கு.
- ❖ அனாதையாக இறந்தவர்களுக்கு அந்திம கிரியை செய்தல் 9 தலைமுறைக்கு.
- ❖ பசுவின் உயிரைக் காப்பாற்றுவது 14 தலை முறைக்கு.
- ❖ முன்னோர்களுக்கு கயாஷேத்திரத்தில் பிண்டம் அளித்து திதிபூஜை செய்தல் 21 தலைமுறைக்கு. புண்ணியம் கிடைக்கும்.

மேற்கண்ட புண்ணியங்கள் முழு மனதுடன் செய்வதால் கிடைக்குமேயன்றி, இக்காலத்தில் செய்வதைப் போன்று, 100 ரூபாய் உதவிக்கு 1000 ரூபாய்க்கு மைக்செட்போட்டு ஊறிய விளம்பரம் செய்து உதவி நம்மை கொடைவள்ளலாக காட்டினால் மேற்கண்ட தலைமுறைகளுக்கு பாவம் மட்டுமே வந்து சேருமேயன்றி புண்ணியத்தின் பலன் வந்து சேராது.

வலக்கையில் கொடுப்பதை இடக் கைக்கு தெரியக்கூடாது என்ற முன்னோரின் வாக்கிற்கேற்ப நன்மை செய்து அதன் பலனை முழுவதும் பெறலாம்.

# வைகுண்டம் எவ்வளவு தூரம்?



மன்னன் ஒருவனுக்கு ஒரு சந்தேகம் வந்தது. வைகுண்டம் என்று சொல்கிறார்களே, அது பூமியிலிருந்து எவ்வளவு தூரம்? என்பதேமன்னனின் சந்தேகம். அவையைக் கூட்டி சபையிலுள்ள பண்டிதர்களிடம் இந்தக் கேள்வியைக் கேட்டான். அவர்கள் அவரவர் அறிவுக்கு எட்டிய வரை, வைகுண்டம் எவ்வளவு தூரத்தில் உள்ளது என்பதைக் குறிப்பிட்டனர்.

மன்னன் திருப்தியடையவில்லை. அப்போது சபையிலிருந்த விதூஷகன் எழுந்து, மகாராஜா! வைகுண்டம் கூப்பிடும் தூரத்தில் உள்ளது என்றான்.

இதற்கு ஆதாரம் என்ன? என்று மன்னன் கேட்டான்.

உடனே விதூஷகன்,

“கஜேந்திரன் எனும் யானையை முதலை பிடித்தபோது, ஆதிமூலமே என்று கூவி அழைத்தது அந்த யானை. அதன் குரல் கேட்டு க்ஷண நேரத்தில் மகாவிஷ்ணு அங்கே தோன்றி, கஜேந்திரனைக் காப்பாற்றினார். இது உண்மை எனில், வைகுண்டம் கூப் பிடும் தூரத்தில் இருக்கிறது என்பதும் உண்மை தானே?” என்று பதிலளித்தான். சபையோர் கரகோஷ மிட்டு வாழ்த்தினர். மன்னன் மன மகிழ்ந்து விதூஷகனுக்குப் பரிசுகள் வழங்கிப் பாராட்டினார்.



# கர்மவினைகள் இருந்தால் குலதெய்வம் மறந்துபோகும்

குலத்தினை காக்கும் தெய்வம் குலதெய்வம் ஆகும்.தெய்வங்களில் மிகவும் வலிமையான தெய்வம் குலதெய்வம் ஆகும். குலதெய்வமே நமக்கு எளிதில் அருளினை தரும். மேலும் மற்ற தெய்வ வழிபாடுகளின் பலன்களையும் பெற்று தரும். குலதெய்வம் பெரும்பாலும் சிறு தெய்வமாகவே காணப்படும். ஆனால் அதன் சக்தியை அளவிடமுடியாது. சிறு தெய்வம் என்று அலட்சியப் படுத்தக்கூடாது.

எமன் கூடஒருவரின் குலதெய்வத்தின் அனுமதி பெற்று தான் உயிரை எடுக்கமுடியும். குலதெய்வம் என்பது நமது முன்னோர்களில்

தெய்வமாக மாறிவிட்ட புண்ணிய ஆத்மாக்கள் ஆகும். அந்த புனித ஆத்மாக்கள் தங்களின் குலத்தினை சார்ந்தவர்களை கண்ணும் கருத்துமாக பேணிக்காக்கும் வல்லமை படைத்தவை. எனவே தான் அந்த தெய்வங்கள் குலதெய்வங்கள் என்று சிறப்புடன் அழைக்கப்படுகின்றன. குல தெய்வங்களும் கர்மவினைகளை நீக்க வல்லமை உண்டு.

யாருக்கு கர்மவினைகள் மிக அதிகமாக இருக்கிறதோ அவருக்கு குலதெய்வமே தெரியாமல், பேசாமல் போவதும் உண்டு.

குலதெய்வம் என்பது நமது முன்னோர்களில் தெய்வமாக மாறிவிட்ட புண்ணிய ஆத்மாக்கள் ஆகும். அந்த புனித ஆத்மாக்கள் தங்களின் குலத்தினை சார்ந்தவர்களை கண்ணும் கருத்துமாக பேணிக்காக்கும் வல்லமை படைத்தவை. எனவே தான் அந்த தெய்வங்கள் குலதெய்வங்கள் என்று சிறப்புடன் அழைக்கப்படுகின்றன.

பொதுவாக பெண்கள் மட்டும் இரண்டு குல தெய்வங்களை வணங்குபவர்களாக இறைவன் படைத்திருக்கிறான். பிறந்த வீட்டில் ஒரு தெய்வம் புகுந்த வீட்டில் ஒரு தெய்வம்.

திருமணத்திற்கு முன் பிறந்த வீட்டின் குல தெய்வத்தை வணங்குபவர்கள் திருமணம் முடிந்தவுடன் கணவனின் வீட்டில் உள்ள குல தெய்வத்தை வணங்க ஆரம்பிக்கிறார்கள். பிறந்த வீட்டின் குலதெய்வத்தை வணங்குவது கிடையாது. பிறந்த வீட்டின் குலதெய்வத்திற்கு வருடத்திற்கு ஒரு முறை செய்யும் வழிபாடு அவர்களை ஆண்டு முழுவதும் காப்பாற்றும். புகுந்த வீட்டில் எந்த பிரச்சினையும் சமாளிக்க கூடிய ஒரு ஆற்றலை தரும்.

பிறந்த வீட்டின் குல தெய்வத்திற்கு வழிபாடு செய்யாமல் இருந்தால், பிறந்த வீட்டின் குலதெய்வத்திற்கு திருவிழாகாலங்களில் வழிப்பாட்டை மேற்கொள்ளுங்கள்.

ஒருவரது குலம் ஆல்போல் தழைத்து அருகுபோல வேரூன்ற வேண்டுமானால் குலதெய்வ வழிபாடு மிக, மிக முக்கியம். குலதெய்வதோஷம் / சாபம் இருந்தால், மற்ற தெய்வங்களின் அருள் கிடைக்காது. குலதெய்வத்தின் அனுமதி அல்லது அனுகிரகம் இல்லை என்றால் ஒருவர் என்னதான் சக்தி வாய்ந்த ஹோமம், யாகம் செய்தாலும், ஆலயங்களுக்கு சென்றாலும் எதிர்பார்த்த பலன் தருமா என்பது சந்தேகம்தான்.

எனவே உங்கள் குலதெய்வத்தின கோவிலுக்கு அடிக்கடி செல்லுங்கள். அபிஷேக ஆராதனைகள் செய்யுங்கள். அக்கோவிலுக்கு உதவுங்கள். பூஜைகள் நடைபெற ஏற்பாடு செய்யுங்கள். பிறகு பாருங்கள் உங்கள் வாழ்க்கை போகும் போக்கை அடிப்படையில் இந்துமதம் பற்றற்றதன்மையை போதிக்கிறது, அதாவது அனைத்தையும் துறந்து தியானம், தவம் மூலம் இறை நிலையை அடைவது. ஆனால் இந்த குலதெய்வம் மனிதன் லௌகீக வாழ்க்கைக்கு தேவையான பலன்களை அளிக்கிறது.

குலம் தெரியாமல் போனாலும், குல தெய்வம் தெரியாமல் போக கூடாது. குருவை மறந்தாலும் குல தெய்வத்தை மறக்க கூடாது இதெல்லாம் கிராமத்தில் பேசப்படும் பழமொழிகள்.

இவை குலதெய்வத்தின் முக்கியத்துவத்தை வலியுறுத்துகின்றன. குல தெய்வங்கள் என்பவை வெறும் வாய்வழிக் கதைகளின் நாயகர்கள் அல்ல; அவை நம் முன்னோர்கள். தங்களை காப்பாற்றியவர்களையோ, தங்கள் காலத்தில் வாழ்ந்த சிறந்த மனிதர்களையோ, நமக்கு நினைவுறுத்த, பெரியவர்கள் குல தெய்வங்களாக வழிபட்டு வந்திருக்கின்றார்கள். குல தெய்வங்களாக சிறு தெய்வங்களே பெருமளவில் விளங்குகின்றன.

இந்த தெய்வங்களை வழிபட மரபுகள் உள்ளன. பெருங்கோயில்கள் போன்று நினைத்த நாளில் சென்று வழிபட வாய்ப்புகள் குறைவு. காரணம் பல குல தெய்வ கோயில்களில் நித்திய பூஜை இருப்பதில்லை, கோயில்களும் மலை, ஆறு, குளம், கண்மாய், காடு போன்ற இடங்களில்தான் இருக்கும். அதற்கு சரியான போக்குவரத்து இருக்காது. இந்த குல தெய்வ வழிபாட்டை கார்த்திகை மாதம் திருகார்த்திகையின் போதும், பங்குனி மாதம் உத்திர நட்சத்திரத்தன்றும் மேற்கொள்வது சிறப்பு என்று முன்னோர்கள் வரையறுத்துள்ளனர்.

இதில் பங்குனி மாதம் உத்திரம் நட்சத்திரத்தன்று குலதெய்வ வழிபாடு செய்வது மிகவும் சிறப்புக்குரியதாகும்.

வானளவு பிரச்சனைகளையும் மடுவளவாக மாற்றும் வள்ளமை படைத்த குலதெய்வத்தை தரிசித்து குலதெய்வம் வீற்றிருக்கு கோவிலுக்கு முடிந்த உதவி செய்து மிகுந்த பலன் பெறுவோம்.

–ஸ்ரீபதி



## சுக்கு வெல்ல நைவேத்தியம்

ஸ்ரீரங்கத்தில் அருள்பாலிக்கும் பெருமாளுக்கு, தினமும் படைக்கப்படும் நைவேத்தியத்துடன் சுக்கு, வெல்லம் கலந்த கலவையை படைக்கின்றனர். இந்தப் பிரசாதம் ஒருவித மருந்தாகவே திகழ்கிறது. பெருமாளுக்கு படைக்கும் மற்ற உணவுகளால் எந்தவித சிக்கலும் வரக்கூடாது என்பதால் தன்வந்திரி பகவானே, பெருமாளுக்கு இந்த மருத்துவ கலவையை படைப்பதாக ஐதீகம்.

## அரூபமாக நவக்கிரகங்கள்

திருப்பைஞ்ஞீலி நீலகண்டேஸ்வரர் ஆலயத்தில் ஒரு கல்லில் ஒன்பது குழிகள் காணப்படுகின்றன. இந்த 9 குழிகளையும் 9 நவக்கிரகங்களாக எண்ணி பக்தர்கள் வழிபாடு செய்கிறார்கள். இதை அரூப வழிபாடு என்று கூறுகிறார்கள். இதே வழிபாட்டு முறை திருமழப்பாடியில் உண்டு. இங்கே நவக்கிரகங்கள் மூன்று குழிகள் வடிவமாக இருப்பதாக ஐதீகம்.

## பதவி தரும் முருகன்

புதுக்கோட்டை மாவட்டம் திருவேங்கை வாசல் என்ற இடத்தில் அருள்பாலிக்கும் முருகப்பெருமான், தலையில் தொப்பி அணிந்த கோலத்தில் காட்சியளிக்கிறார். அவரை செவ்வாய்க்கிழமை தோறும் தொடர்ச்சியாக 9 வாரங்கள் அர்ச்சனை செய்து வழிபட்டு வந்தால், உயர் பதவிகள் கிடைக்கும் என்கிறார்கள். புதிய பொறுப்புகளில் அமர்வதற்கான வாய்ப்புகள் உருவாகுமாம்.

## தீய கனவை போக்கும் அனுமன்

சென்னை சவுகார்பேட்டையில் ஏகாம்பரேஸ்வரர் கோவில் இருக்கிறது. இங்கு சிவன் சன்னிதிக்கு முன்பாக வலது புறத்தில் உள்ள தூணில் ஆஞ்சநேயர் இருக்கிறார். இவருக்கு வெள்ளி நிறத்தினாலான ஜரிகை பூசி, துளசி மாலை சாத்தி வணங்கினால், தீய கனவுகள் விலகி ஓடும், நல்ல கனவுகள் பலிக்கும் என்கிறார்கள். எனவே இவரை ‘கனவு ஆஞ்சநேயர்’ என்று அழைக்கிறார்கள்.

## தீமை அகற்றும் திருநீறு

ஞானம் என்ற நெருப்பில் வினைகள் அனைத்தும் சுட்டெரிக்கப்பட்ட பின், எஞ்சி நிற்பது பரிசுத்தமான சிவதத்துவமே என்பதை விளக்கும் பொருளே வெண்ணீறு என்னும் திருநீறு ஆகும். அதாவது நம் உடலில், எண்ணத்தில் உள்ள துரு நீரை (தீய சக்திகள்) அகற்றுவது, தன்னை தரிசிப்பவர்களுக்கு சகல ஐஸ்வரியங்களையும் வாரி வழங்குவது என்பதால் தான் அந்த திருநீற்றை, ‘விபூதி’ என்று அழைக்கிறார்கள்.

## அமிர்த கலசத்துடன் ஐயப்பன்



கேரளாவில் உள்ள சபரிமலை தான் ஐயப்பன் வீற்றிருக்கும் ஆலயங்களிலேயே பிரசித்தி பெற்றது. அந்த ஐயப்பன், கேரளாவின் குளப்புள்ளி என்ற இடத்தில் கையில் அமிர்த கலசத்துடன் காட்சி தருகிறார். ஆயுள் விருத்திக்கும், செல்வச் செழிப்புக்கும் இவரிடம் வேண்டிக் கொள்ளலாம் என்கிறார்கள், இங்குள்ள பக்தர்கள். பாலக்காட்டில் இருந்து 47 கிலோமீட்டர் தூரத்திலும், குருவாயூரில் இருந்து 45 கிலோமீட்டர் தூரத்திலும் குளப்புள்ளி ஐயப்பன் சுவாமி ஆலயம் அமைந்திருக்கிறது.

## மூச்சுப் பிடிப்பு அம்மன்

திருச்சுழியில் உள்ள திருமேனிநாத் ஆலயத்தில் மூச்சுப் பிடிப்பு அம்மன் பிரசித்திப் பெற்றவராக திகழ்கிறார். அம்பாள் சன்னிதி கொடிமரத்தின் அருகில் உள்ள தூண் ஒன்றில் இருக்கிறார். மூச்சுப்பிடிப்பு நோயால் சிரமப்படும் பக்தர்கள் பலரும், இந்த அம்பாளுக்கு நல்லெண்ணெயில் மஞ்சள் கலந்து பூசி வழிபடுகிறார்கள்.

## நலம் தரும் வழிபாடு

அஸ்வத்தாமா, மகாபலி, வியாசர், அனுமன், விபீஷணன், கிருபர், பரசுராமர் ஆகிய 7 சிரஞ் சீவிகளையும், அருந்ததி, அனுசுயா, சாவித்ரி, ஜானகி, சதிதேவி என்ற தாட்சாயிணி ஆகிய 5 கற்புக்கரசிகளையும் காலையில் எழுந்ததும் வணங்கும் ஆண்கள், பெண்களுக்கு எல்லா வளமும் நலமும் கிடைக்கும் என்பது நம்பிக்கை.

தொகுப்பு மூ.சக்திவேல்
Cell No.09787576858

# பிறந்த கிழமையும் பொதுவான பலன்களும்

**ஞாயிறு:** கடின வேலைகளையும் மிகஎளிதாகவும் திறமையாகவும் முடித்து சாதனை படைப்பார்கள். சொன்னதைச் செய்வார்கள். இயலாது எனில் மௌனம் சாதிப்பார்கள். உற்றார் உறவினருக்கு உதவும் குணம் கொண்டவர். இவரது தலைமையின் கீழ் பலபேர் பணிபுரிவார்கள்.

நல்லன அருளும் தேதிகள்: ஞாயிற்றுக் கிழமையுடன் 1, 10, 19, 28 ஆகிய தேதிகள் இணைந்திருக்க பிறந்தவர்களுக்கு எதிலும் இரட்டிப்பு மகிழ்ச்சி உண்டாகும். புதிய முயற்சிகளை இந்தத் தேதிகளில் துவங்கலாம்.

ஏற்றம் தரும் வயது காலங்கள்: 19, 28, 37, 45, 55, 64, 73

வளம் தரும் கிழமை: வெள்ளி

வழிபாடு: ஞாயிறன்று சூரிய உதயத்துக்குமுன் எழுந்து காலைக்கடன்களை முடித்து, ஆதித்ய ஹ்ருதயத்தை பாராயணம் செய்வதால், நல்ல பலன்களைப் பெறலாம்; ஆயுள் விருத்தி உண்டாகும். தந்தையிடமும், பெரியோரிடமும், ஆன்றோரிடமும் ஆசிபெற வேண்டும். தெய்வ வழிபாடுகளில் கோதுமை பண்டத்தால் நைவேத்தியம் செய்தல் நலம்.

**திங்கள்:** சாந்தமான மனம் படைத்தவர். இனிமை, அன்பு, உதவும் உள்ளம் உள்ளவர். எதிரிகளையும் நண்பர்களாக பாவிப்பர். தர்ம நியாயங்களைக் கடைப்பிடிப்பதில் உறுதி உள்ளவர். இவர்களுக்குச் சொந்தத் தொழில் கைகொடுக்கும். குளிர்ச்சியான தேகம் உடையவர்.

நல்லன அருளும் தேதிகள்: இவர்கள் 2, 7, 11, 16, 20, 25, 29 ஆகிய தேதிகளில் புதிய தொழில் தொடங்குதல், பொருள்களை வாங்கி சேகரித்தல், சுப நிகழ்ச்சிகள் செய்வது சிறப்பு.

ஏற்றம் தரும் வயது காலங்கள்: 20, 29, 38, 47, 56, 65, 74 இந்த வயதுகள் நடக்கும்போது திருப்திகரமான திருப்பங்கள் உண்டாகும்.

வளம் தரும் கிழமை: திங்கள்கிழமையே!

பரிகார வழிபாடு: திங்கள்கிழமைகளில் அதிகாலையில் எழுந்து காலைக்கடன் முடித்து நீராடி, தாயை வணங்கி ஆசிபெறுவதால் சிறப்பான பலன்கள் கிடைக்கும். அத்துடன், சக்தி தலங்களுக்குச் சென்று வெள்ளை நிறப் பூக்களால் அம்பாளுக்கு அர்ச்சனை செய்து வழிபடுவதும் விசேஷம். கற்கண்டு கலந்த நைவேத்தியங்களைப் படைத்து வழிபடலாம்.

**செவ்வாய்:** செவ்வாய்க்கிழமையில் பிறந்தவர்கள் பலரிடமும் பலவிதமான யோசனைகளைக் கேட்பார்கள். ஆனாலும் தான் வைத்ததே சட்டம்; தான் நினைப்பதே சரி எனும் மனப்போக்குடன் திகழ்வார்கள். நல்லவர்களுக்கு நல்லவர்; கெட்டவர்களுக்கு கெட்டவராகத் திகழ்வார். அதனாலேயே பலருக்கும் இவரைப் பிடிக்காது. ஆனால், அதைப் பற்றி இவர்கள் கவலைப்பட மாட்டார்கள். நியாய தர்மத்துக்குக் கட்டுப்பட்டவர்கள்.




நல்லன அருளும் தேதிகள்: 9, 18, 27 ஆகிய தேதிகளில் புதிய முயற்சிகளை கையிலெடுத்தால் பல நன்மைகள் கிடைக்கும்.

ஏற்றம் தரும் வயது காலங்கள்: 18, 27, 36, 45, 54, 63, 72 ஆகிய வயதுகளில் நல்ல திருப்பங்கள் உண்டாகும்.

வளம் தரும் கிழமை: வியாழன்

பரிகார வழிபாடு: செவ்வாய்க்கிழமைகளில் அதிகாலை எழுந்து நீராடி, அரளிப்பூவால் முருகப் பெருமானை அர்ச்சித்து வழிபட்டால், வாழ்க்கை வளம்பெறும். அன்றைய மாலைப்பொழுதில் ஸ்ரீபைரவரை வழிபடுதல் விசேஷம். துவரம் பருப்பால் செய்த நைவேத்தியத்தை சமர்ப்பிப்பது சிறப்பு.

**புதன்:** இந்தக் கிழமையில் பிறந்தவர்கள் நல்ல அறிவாளிகளாகத் திகழ்வார்கள். இயந்திரம், வைத்தியம், ஜோதிடம், துப்பறியும் கலை, ஓவியம் ஆகியவற்றில் திறமைசாலிகளாக விளங்குவர். ரகசியம் காப்பதில் வல்லவர். மற்றவர்களின் மனதில் உள்ளதைத் துல்லியமாக அறிந்து அதற்கேற்ப செயல்படுவார்கள். பலதுறைகளில் தேர்ச்சி பெற்றவர்கள். மருத்துவர், நீதிபதி, பொறியாளர், எழுத்தாளர் என்று உயர்ந்த நிலையில் வாழ்வார்கள்.

நல்லன அருளும் தேதிகள்: 5, 14, 23 ஆகிய தேதிகளில் புதிய முயற்சிகளைத் துவங்கினால் வெற்றி கிடைக்கும்.

ஏற்றமிகு வயது காலங்கள்: 23, 32, 41, 50, 59, 68 ஆகிய வயதுகளில் நல்ல முன்னேற்றம் உண்டு.

வளம் தரும் கிழமை: வியாழன்

பரிகார வழிபாடு: புதன்கிழமை அதிகாலையில் எழுந்து நீராடி துளசி மற்றும் மருக்கொழுந்தால் ஸ்ரீமகாவிஷ்ணுவை வழிபடலாம். மேலும் விஷ்ணு சகஸ்ரநாமம், கிருஷ்ணாஷ்டகம் பாராயணம் செய்வதும் சிறப்பு. பாசிப்பயறு சுண்டல் செய்து நைவேத்தியம் செய்தல் நலம்.

**வியாழன்:** வியாழனன்று பிறந்தவர்கள் நீதி தர்மத் துக்கு பக்கபலமாக விளங்குவர். குறுக்கு வழியில் செல்பவரையும் திருத்தி நல்வழிப் படுத்துவதற்கு பாடுபடுவர். உற்றார் உறவுகளுக்கு உதவிபுரிவர். எந்தத் துறையில் ஈடுபட்டாலும் முன்னேற்றம் அடைவர்.

நல்லன அருளும் தேதிகள்: 3, 12, 21, 30 ஆகிய தேதிகளில் புதிய முயற்சிகளைத் துவங்க ஏற்றம் உண்டாகும்.

ஏற்றம் தரும் வயது காலங்கள்: 21, 30, 48, 57, 66, 75, 84 ஆகிய வயதுகளில் வாழ்க்கையில் முன்னேற்றம் (வீடு, மனை, வண்டி, வாகனம்) வசதி ஏற்படும்.

வளம் தரும் கிழமை: வெள்ளி

பரிகார வழிபாடு: வியாழக்கிழமைகளில் சூரிய உதயத்திற்கு முன் ஸ்ரீதட்சிணாமூர்த்தி அஷ்டகத்தைப் பாராயணம் செய்து வழிபடுவது சிறப்பு. தேவகுரு பிரகஸ்பதியை வழிபடுவதால் வளம் பெருகும். மஞ்சள் பூக்களால் அர்ச்சனை செய்ய வேண்டும். கொண்டைக் கடலை சுண்டல் செய்து நைவேத்தியம் செய்தல் நலம். கருட தரிசனம் செய்வது மிக நன்று.

**வெள்ளி:** இந்தக் கிழமையில் பிறந்தவர்கள், பிறக்கும்போதே 'சமர்த்துப் பிள்ளை' என்று பெயரெடுப்பார்கள். பேச்சாலேயே மற்றவர் களை தன் வயப்படுத்துவார். தமது பேச்சை கேட்காதவர்களை புறக்கணித்து விடுவார்கள். எந்த வேலையையும் சிரமம் இல்லாமல் மற்றவர்களின் துணையுடன் பூர்த்தி செய்வார் கள். கணவன் அல்லது மனைவியின் அளவற்ற அன்பிலும் பாசத்திலும் மூழ்கித் திளைப்பர்.

நல்லன அருளும் தேதிகள்: 4, 8, 13, 17, 26, 31 ஆகிய தேதிகள் நலம் பயக்கும்.

ஏற்றம் தரும் வயது காலங்கள்: 22, 26, 31, 35, 44, 53, 62, 66, 71 வயதுகளில் குடும்பம்

பல நன்மைகளைச் சந்திக்கும்.

**வளம் தரும் கிழமை:** திங்கள்.

**பரிகார வழிபாடு:** வெள்ளிக்கிழமை அதிகாலையில் எழுந்து நீராடி மல்லிகைப் பூக்களால் ஸ்ரீராஜராஜேஸ்வரி அஷ்டகம், ஸ்ரீலலிதா திரிசதி ஆகியவற்றை பாராயணம் செய்வது சிறப்பு. பால், பழம், கற்கண்டு, தேன் ஆகியவற்றை நைவேத்தியம் செய்து வழிபடுவது விசேஷம்.

**சனி:** இந்தக் கிழமையில் பிறந்தவர்கள் பொறுமைசாலிகள். வேலை என்று வந்து விட்டால் அதை முடித்துவிட்டே மற்ற வேலைகளைத் துவங்குவர். சான்றோரிடமும் ஆன்றோரிடமும் மிகுந்த பக்தி உள்ளவர். எப்போதும் தான் உண்டு தன்வேலை உண்டு என நினைப்பவர்

**நல்லன அருளும் தேதிகள்:** 8, 17, 26 ஆகிய தேதிகளில் சிறப்பான நன்மைகள் பல பெற்றி டுவீர்.

**ஏற்றம் தரும் வயது காலங்கள்:** 22, 26, 31, 35, 41, 50, 53, 58, 62, 67 ஆகிய வயதுகளில் வாழ்வில் இன்பம் சேரும்.

**வளம் தரும் கிழமை:** வியாழன்

**பரிகார வழிபாடு:** சனிக்கிழமை காலையில் எழுந்து காலைக் கடன்களை முடித்து, நல்லெண்ணெய் தேய்த்துக் குளித்து, நீலாம்பரம், நீல சங்குபூ, வில்வம் சாற்றி சிவனாரை வழிபடுவது சிறப்பு. சிவாலயங்களில் நல்லெண்ணெய் ஊற்றி விளக்கேற்றி வழிபட்டு வந்தால் தோஷங்கள் நீங்கும். வீட்டில் பூஜைக்கு பிறகு காகத்துக்கு எள் கலந்த நெய்சாதம் இடவேண்டும். கருட தரிசனமும் நலம்பயக்கும்.

# சங்கடம் வந்தால் வருந்தாதே....

## துன்பத்தை அனுபவிப்பரே உன்னதம் அடைய முடியும்

பாலுக்கு துக்கம் கொடுத்தால் தயிர் ஆகிறது.

தயிருக்கு துக்கம் கொடுத்தால் வெண்ணெய் ஆகிறது.

வெண்ணெயை கொடுமை செய்தால் நெய் ஆகிறது.

பாலை விட தயிர் உயர்ந்தது, தயிரை விட வெண்ணெய் உயர்ந்தது, வெண்ணெயை விட நெய் உயர்ந்தது.

இதனுடைய அர்த்தம் என்னவென்றால் அடிக்கடி துக்கம் சங்கடங்கள் வந்தாலும் கூட எந்த மனிதனுடைய நிறம் மாறுவதில்லையோ, சமூகத்தில் அவருடைய மதிப்பு அதிகரிக்கிறது.

பால் ஒரு நாளைக்கு மட்டுமே பயன்படுத்த முடியும், பின் அது கெட்டுப் போய் விடும். பாலில் ஒரு சொட்டு மோர் விடும் போது அது தயிர் ஆகிறது. அது இன்னும் 2 நாட்களுக்கு இருக்கும்.

தயிரை கடையும் போது வெண்ணெய் வருகிறது. அது இன்னும் 3 நாட்களுக்கு இருக்கும்.

வெண்ணெயை கொதிக்க வைத்தால் நெய் ஆகிறது. அது ஒரு போதும் வீணாவது இல்லை.

ஒரே நாளில் கெட்டுப் போகும் பாலுக்குள் ஒரு போதும் கெட்டுப் போகாத நெய் ஒளிந்து இருக்கிறது. உங்கள் மனம் கூட அளவற்ற சக்திகளால் நிரம்பியுள்ளது. அதில் கொஞ்சம் நேர்மையான எண்ணங்களைப் போடுங்கள். தனக்குத் தானே சிந்தனை செய்யுங்கள். தன்னுடைய வாழ்க்கையை இன்னும் சரி பாருங்கள். பின் அப்பொழுது பாருங்கள். நீங்கள் ஒருபொழுதும் தோல்வியே காணாத பசுமையான மனிதனாக இருப்பீர்கள்.









வளர்ந்து வரும் டிஜிட்டல் யுகத்தில்
இந்து சமயக் கருத்துக்களையும்,
பழமையான ஆன்மீக புத்தகங்களையும்

# ஆன்மிகமலர் டிரஸ்ட்

Tamilnadu Government Redg.304/2016

முழு முயற்சியுடன் டிஜிட்டல் மயமாக்கி வருகிறது.
அழகிய வண்ணங்களுடன்,
கண்ணைக்கவரும் விதத்தில்
புத்தம் புதிய பொலிவுடன்,
அனைத்துவித டிஜிட்டல் கருவிகளின் மூலமும்
சிறுவர் முதல் வயதானவர் வரை அனைவரும்
தெளிவாக படிக்கும்விதத்தில் தயாரித்து வருகிறோம்.

எங்களின் சேவைக்கு உங்கள் உதவி அவசியம்
உங்களால் முடிந்த உதவிகளை செய்யலாம்.

**AANMEEGA MALAR TRUST**
**ACCOUNT NO. 310601011001269**
**IFSC CODE:VIJB0003106**
**MICR CODE: 600029043**
**VIJAYA BANK (KODAMBAKKAM BRANCH)**

நெ.16/18, பாரதீஸ்வரர் காலனி, 4வது தெரு, கோடம்பாக்கம், சென்னை 600024.
மேலும் தொடர்பு கொள்ளவும்
**8825844033**

# கூழமந்தல் ஸ்ரீபேசும் பெருமாள் திருக்கோயில்

# ஒரே சமயத்தில் 15 கருட சேவை பெருவிழா

கோவிலுக்கு வரும் பக்தர்களை சிரித்த முகத்துடனும், பேசும் முகபாவனையுடன் மிகவும் அன்புடன் அழைக்கும் வகையில் பெருமாள் அருள்புரியும் அற்புதத் தலம்தான் பேசும்பெருமாள் திருக்கோவில். இந்த திருக்கோயில் வீற்றிருக்கும் பெருமாளுக்கு பெயரே பேசும் பெருமாள்.

காஞ்சிபுரத்திலிருந்து வந்தவாசி செல்லும் வழியில் 18 கி.மீ. தொலைவில் உள்ளது கூழமந்தல் என்ற ஊர். இவ்வூர் பெயரும், புகழும் வரலாற்றுச் சிறப்புமிக்கவை.

### விக்கிரமசோழன் கட்டியக் கோயில்:

ஜெயங்கொண்ட சோழ மண்டலத்துக் காலி(ழி)யூர்க் கோட்டத்து பாகூர் நாட்டு நகர் விக்கிரம சோழபுரம் என்று சிவன் கோயில் கல்வெட்டு கூறுகிறது. முதலாம் ராஜேந்திரனின் சிறப்புப் பெயர்களுள் ஒன்று விக்கிரமசோழன். கி.பி.1012 முதல் 1044 வரை முதலாம் ராஜேந்திரன் சோழநாட்டை ஆண்டான். வட ஆற்காடு மாவட்டம் பிரம்மதேசத்தில் இறைவனடி சேர்ந்தான். இவனுடைய ஆட்சிக் காலத்தில் இவ்வூர் "விக்கிரமசோழபுரம்" எனப் பெயர் பெற்றது.

ராஜேந்திரன் வடக்கே கங்கை வரை சென்று வெற்றி பெற்றபின், தென் ஆற்காடு மாவட்டத்தில் "கங்கை கொண்ட சோழபுரம்" எனும் நகரத்தை உருவாக்கினான். அதையே தலைநகராகவும் கொண்டான். அங்கு "கங்கை கொண்ட சோழீச்சுரம்" என்னும் மாபெரும் கோயிலையும் கட்டினான்.

கூழம் பந்தலிலும் ஆசார் யர் சர்வ சிவ பண்டிதர் ஆணையால் அற்புத கற்றளி ஒன்று கிளம்பியது. இதுதான் "கங்கை கொண்ட சோழீச்சுரம்" என்னும் சிவன் கோயிலாக உருவாயிற்று. இக்கோயிலில் உள்ள சிவலிங்கம் மிகவும் கண்கொள்ளாக் காட்சியாக இருக்கிறது. இக்கோயில் முழுவதும் கருங்கற்களால் இழைத்து கட்டப்பட்டுள்ளது.

இக்கோயில் தெப்பக்குளத்தில் மிதப்பது போன்ற அமைப்புடன் கட்டப்பட்டுள்ளது இதன் சிறப்பு அம்சம்.

ஈசான்யத்தில் சிவாலயமும், பஸ்சிமத்தில் விஷ்ணு கிரகமும் ஒரு ஊரின் நேத்திரங்கள் என்பார்கள். அதை அனுசரித்து, இங்கும் மேற் கில் ஒரு பெருமாள் கோயில் கட்டப்பட்டது. அந்தக்கோயிலே பேசும் பெருமாள் திருக்கோயிலாகும்.

### 12 அடி உயர பேசும் பெருமாள்:

கங்கை கொண்ட சோழீச்சுரம் சிவன் கோயில் கட்டப் பெற்ற காலத்திலேயே (கி.பி.1012 1044) பேசும் பெருமாள் கோயிலும் கட்டப்பட்டிருக்கிறது. உண்மையாகவே பெருமாள் முன்பு நின்று நோக்கினால், பெருமாள் கருணையுடன் நம்மை நோக்கி புன்முறுவலுடன், பேசுவது போல அமையப்பெற்றுள்ளது.

"கோப்பரகேசரி பத்மரான நுடையார் ராஜேந்திர தேவர்க்கு யாண்டு
எட்டாவது ஜயங்கொண்ட சோழ மண்டலத்து காலியூர்க் கோட்டத்து
பாகூர் நாட்டு நகரம் விக்கிரம சோழபுரத்துக் கூடி நாநாதேசி
இசையாயிரத்தை போற்றுவர்"

என்று இங்கு கிடைத்த கல்வெட்டுகூறுகிறது. எனவே இக்கோயில் முதலாம் ராஜேந்திரன் ஆட்சிக் காலத்திலேயே கட்டப் பெற்றிருத்தல் வேண்டும் என்பது தெளிவாகிறது.



**பேசும் பெருமாள் பெயர்க் காரணம்:** பேசும் பெருமாள் நின்ற திருக்கோலத்தில் காட்சியளிக்கின்றார். மிகவும் கம்பீரமான தோற்றம். இரு கைகளிலும் சங்கு சக்கரங்கள், மற்றொரு வலக்கை நமக்கு அருள்பாலிக்கும் வரதஸ்தம், இடக்கை தொடையில் பதிந்துள்ளது. ஏராளமான அணிகலன்கள், கிரீடம், அதில் பல வண்ண வேலைப்பாடுகள். ஸ்ரீதேவி, பூதேவி இருவரும் அணிந்துள்ள அழகிய அணிகலன்கள், தலைக்கிரீடங்களும் மெய்மறக்கச் செய்கின்றன. பெருமாளின் திரு மேனிகளின் காதுகளில் மிக மிகச் சிறிய ஊசி நுழைவதற்குரிய கண்ணுக்குத் தெரியாத துவாரங்களை அமைத்து சிற்பிகள் தங்கள் கலைத் திறனையும், கை வண்ணத்தையும் காட்டியுள்ளனர்.

### தாமரை மலருடன் தாயார் :

இக்கோயிலின் தனிப்பெருஞ்சிறப்பு தாயார் இருவருமே தங்கள் வலக்கையில் தாமரை மலர்களை பற்றியிருப்பது. இது மிகமிக அரிதானக் காட்சி. மற்ற கோயில்களில் ஒரு தேவி வலக்கையிலும் இன்னொரு தேவி இடக்கையிலும் தாமரை மலரை வைத்திருப்பார். இங்கு இதிலும் புதுமை. இவ்வளவு கம்பீரமான தோற்றமாக இருந்தாலும் சாந்த மூர்த்தியாக திகழ்கிறார் பேசும் பெருமாள்.

### மன்னனுடன் பேசிய பெருமாள்:

ஆந்திர மாநிலத்தில் உள்ள நெல்லூரரையும், நம் காஞ்சிபுரத்தையும் தலைநகராகக் கொண்டு ஆட்சி புரிந்தவர்கள் தெலுங்கு சோழர்கள். அவர்களில் தமிழ்நாட்டுடன் தொடர்பு கொண்டவர் ஸ்ரீ விஜயகண்ட கோபாலன். இவர் கி.பி. 1250ல் ஆட்சி ஏற்றான். பிறகு கி.பி. 1270 ஆம் ஆண்டு இக்கோயிலுக்கு வந்து இப்பேசும் பெருமாளிடம் பேசி, பேசியதற்கு ஆதாரமாக இரண்டு வாயிற்படி நிலைகால்களில் கல்வெட்டுக்கள் பொரித்துள்ளார். இவர் இக்கோயிலுக்காக அந்தியிலும், சந்தியிலும் மூன்று விளக்கு எரிக்க (வைக்க) 14 பணமும் பதின்கல நெல்லும் கொடுத்துள்ளார்.

இவ்வூர் பட்டன் (பட்டாச்சாரியார்) ஒருவர், உலகில் சூரியன், சந்திரன் உள்ளவரை அந்த மூன்று விளக்கையும் கோயிலில் எரிய இந்தப் பணத்தையும், நெல்லையும் பெற்றுக் கொண்டார். இவ்வாறு பேசும் பெருமாள் திருக்கோயில் பெரும்புகழ் பெற்று விளங்குகிறது.

வைணவ நெறியைப் பின்பற்றி பக்தியில் சிறந்து விளங்கிய பன்னிரு ஆழ்வார்களுள் ஒருவரும். நான்கு வேதங்களையும் தீந்தமிழில் பாடியதால் "வேதம் தமிழ்செய்த மாறன்" என்றும் போற்றப்படுபவரும் பிரபந்தங்களில் 1296 பாசுரங்களில் திருமாலைப்பற்றி பாடி வைணவத்திற்கு பெருமை சேர்த்தவருமான நம்மாழ்வாரை பெருமைப்படுத்தும் விதமாகவும். அவதார நாளை கொண்டாடும் விதமாக ஸ்ரீபேசும் பெருமாள் திருக்கோயில் மற்றும் சுற்றுப்புற கிராமங்களான பெருநகர். மானம்பதி. விசூர், தண்டரை. சேத்துப்பட்டு. இளநகர். இளநீர் குன்றம். தேத்துறை. சோழவரம். பெண்டை உள் ளிட்ட 15 கிராமங்களிலிருந்து பெருமாள் கருட வாகனங்களில் சேய் ஆற்றில் எழுந்தருளச்செய்து அனைத்து சுவாமிகளையும் நம்மாழ்வார் மங்களாசாசனம் செய்வது போன்று உற்சவம் நடத்தப்பட்டுவருகிறது.

அற்புதமான இந்த பெருவிழா 29.05.2018 அன்று இரவு நடைபெற உள்ளது. முன்னதாக பல்வேறு கிராமங்களிலிருந்து பெருமாள் திருவுருவங்கள் கருட வாகனங்களில் எழுந்தருளச்செய்து இரவு 9.00 மணிக்கு சேய் ஆற்றிக்கு வந்து அங்கு சிறப்பு அபிஷேகங்கள். அலங்காரம் நடைபெற்று சுவாமிகள் அனைவரையும் ஆற்றில் இறங்கி சுற்றி நிறுத்தப்படும். பின்னர் அங்கு எழுந்தருளம் நம்மாழ்வார் அனைத்து சுவாமிகளுக்கும் தனித்தனியாக மங்கலாசாசனம் செய்வார். பின்னர் அனைத்து சுவாமிகளுக்கும் மகா தீபராதனைகள் நடைபெற்ற பின்னர் தத்தம் கிராமங்களுக்கு புறப்பட்டு செல்லும். இவ்விழாவிற்கான ஏற்பாடுகளை 15 கிராம பொதுமக்கள் செய்துவருகின்றனர். இந்த அற்புத நிகழ்வில் பக்த கோடிகள் கலந்து கொண்டு பெருமாளின் அருளை பெறுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

இப்படிக்கு
விழா ஒருங்கிணைப்பு குழுவினர்
செல்: 09787906582
தொலைபேசி : 04182245304,



# குருடனை குருடன் வழிநடத்த முடியாது

34 பாகம்
பரமஹம்ஸ யோகானந்தர் அருளிய வழிமுறைகள்
மனித வாழ்வு மேம்படுவதற்காக

குருதேவர் பரமஹம்ஸ யோகானந்தர் அருளுகிறார்: "ஆன்ம ஒருமைப்பாடு, இறைஞானம் பெற்ற தலைசிறந்த மனிதர்களின் வாழ்வில் மெய்ப்பிக்கப்பட்டுள்ளது. குருடன் குருடனை வழிநடத்த முடியாது; இறைவனை அறிந்த ஒரு மகான் (தன்னை ஒருவர்மனம், உணர்ச்சிகள், புலன்கள், அடங்கா ஆசைகள் ஆகியவற்றை வென்றவர். அவரது செயல்கள், அகங்கார நோக்கங்களால் கறைபடாமல், இறைவனது திருவுள்ளத்தோடு ஒத்திருக்கின்றன.

மேலும் அவர், கற்பனையில் அல்லாமல் தெய்வீக சர்வவியாபகத்தின் உண்மை அனுபவத்தில் நானும் இறைவனும் ஒன்று என்பதை அறிகிறார்) மட்டும்தான் இறைவனைப்பற்றி மற்றவர்களுக்குச் சரியாக போதிக்கமுடியும். தன்னுடைய தெய்வீகத் தன்மையை மீண்டும் பெற, ஒருவர் இத்தகைய ஒரு மகானை அல்லது குருவைப் [ஆன்மீக ஆசான். குரு கீதை (1719) மிகப்பொருத்தமாக குருவை 'இருளை விலக்குபவர்' என வர்ணிக்கிறது. [கு 'இருள்', 'போக்கச்செய்வது'] 'குரு' என்ற தெய்வ நியதியின்படி மிக உயர்ந்த ஆன்மாக்களுக்கு, அதாவது எவர் தமது சொந்த ஆத்ம அனுபூதி மற்றும் இறைவனுடன் ஒன்றிணைந்த தன்மையால் மற்றவர்களை அஞ்ஞான இருளிலிருந்து என்றும் நிலைத்திருக்கும் உண்மையின் ஒளிக்கு வழி நடத்தத் தகுதி பெற்றவர்களோ, அந்த ஆன்மாக்களுக்கு மட்டும் வழங்கப்படுகிறது] பெற்றிருக்க வேண்டும். ஓர் உண்மையான குருவை விசுவாசத்துடன் பின்பற்றுபவன், அவரைப்போலவே ஆகிறான். ஏனெனில் குருவானவர் சீடனை தனது சொந்த இறைஞான நிலைவரை உயர்த்த உதவிபுரிகிறார். நான் எனது குருதேவர் ஸ்வாமி ஸ்ரீ யுக்தேஸ்வரரைக் கண்டபொழுது, அவருடைய உதாரணத்தைப் பின்பற்ற என் மனதில் தீர்மானித்தேன். அதாவது இறைவனை மட்டும் இதயபீடத்தில் வைத்தல், மேலும் அவனை மற்றவர்களுடன் பகிர்ந்துகொள்ளுதல்.

மிக ஆழ்ந்த ஞானத்தை அடைவதற்கு ஒருவர் தன் பார்வையை எல்லா மறிந்த ஆன்மீகக் கண் மூலம் குவியச் செய்யவேண்டும் என்று இந்து ஆசான்கள் போதித்தார்கள். தீவிரமாகச் சிந்திக்கும்பொழுது யோகியல்லாதவன்கூட இரு புருவங்களுக்கு இடையே உள்ள மையப்புள்ளியில் தன் நெற்றியைச் சுருக்குகிறான். அந்த மையப் புள்ளிதான் ஒருமுகப்படுவதற்கான மற்றும் கோள வடிவ ஆன்மீகக் கண்ணின் மையம். அதாவது ஆன்ம உள்ளுணர்வின் இருக்கை. அதுதான் உண்மையான ஸ்படிகப் பந்து. யோகியானவன் பிரபஞ்சத்தின் ரகசியங்களை அறிவதற்கு அதனுள் பார்வையைச் செலுத்துகிறான். தமது ஒருமுகப்படுதலில் போதுமான அளவு ஆழமாகச் செல்பவர்கள் அந்த 'மூன்றாவது கண்ணை'த் துளைத்து இறைவனைக் காண்பார்கள். ஆதலால் ஆன்மீக சாதகர்கள், ஆன்மீகக்கண் வழியே தமது பார்வையை நீட்டிக்கும் அளவு வளர்க்கவேண்டும். யோகப்பயிற்சியானது சாதகருக்கு, உள்ளுணர்வின் உணர்வு நிலையான நெற்றிக்கண்ணைத் திறப்பதற்கு உதவிபுரிகின்றது.

உள்ளுணர்வு அல்லது நேரடி ஞானம் என்பது புலன்களிலிருந்து வரும் எந்த விவரங்களையும் சார்ந்திருப்பதில்லை. அதனால்தான் உள்ளுணர்வுத்திறம் பெரும்பாலும் 'ஆறாவது புலன்'



என்றழைக்கப்படுகிறது. ஒவ்வொருவரும் இந்த ஆறாவது புலனைப் பெற்றிருக்கிறார்கள். ஆனால் பெரும்பாலானவர்கள் அதை வளர்ப்பதில்லை. இருப்பினும் கிட்டத்தட்ட அனைவருமே ஏதோ ஒரு உள்ளுணர்வு அனுபவத்தைப் பெற்றுள்ளார்கள். ஒருவேளை ஓர் குறிப்பிட்ட சம்பவம் நிகழப்போகிறது என்ற ஓர் 'உணர்வை' அதைப்பற்றிய எந்த ஒரு புலன்வழி சாட்சியும் இல்லாதபொழுது பெறுதல்.

இறைவன் ஒருவரது சொந்த தேக ஆலயத்தில் முதலில் அறியப்படவேண்டும். ஒவ்வொரு சாதகரும் தினமும் தனது எண்ணங்களை ஒழுங்குபடுத்தி, தன் ஆன்மபீடத்தில் தனது பக்தி எனும் இயற்கையாகவே வளரும் பூக்களைச் சமர்ப்பிக்கவேண்டும். தன் அகத்தில் இறைவனைக் காண்கின்ற ஒருவர், அவர் நுழையும் ஒவ்வொரு தேவாலயத்திலும் அல்லது கோவிலிலும் இறைவனது இருப்பை உணரமுடியும்."

குருதேவர் ஸ்ரீ ஸ்ரீ பரமஹம்ஸர் மேலும் அருளுகிறார்: இறைவனுக்கு நீங்கள் வேண்டுமென்ற காரணத்தினால்தான் நான் உங்களுடன் இங்கு இருக்கிறேன். உங்களை பெருவீட்டிற்குளங்கே எனது அன்பிற்குரியவன் இருக்கின்றானோ, எங்கே கிருஷ்ணனும் பாபாஜியும், லாஹிரி மகாசயரும், ஸ்ரீ யுக்தேஸ்வரரும், மற்ற வேறு மகான்களும் இருக்கின்றார்களோ அங்கே வரும்படி அழைக்கிறேன். இறைவன் கூறுகிறான்", வாருங்கள், என்னுள் இவர்கள் எல்லோரும் பேரின்பத்தில் திளைக்கிறார்கள். உலக இன்பங்கள் உணவின் சுவை, மலர்களின் அழகு, அழியக்கூடிய சிற்றின்பம்ஆகிய எதுவும் என்வீட்டின் தெய்வீக ஆனந்தத்திற்கு இணையாகாது." ஒரே ஒரு மெய்மைதான் உள்ளது. அதுதான் இறைவன். மற்ற எல்லாவற்றையும் மறந்துவிடுங்கள்."

மகான்களின் மகத்தான மொழிகள் சிலவற்றைக் கூற விரும்புகிறேன்.

"பாவம் நீங்குவதற்கு ஒரே வழி ஈசுவர தியானம்தான். பழைய பாவகர்ம பலனை அனுபவித்துத் தீர்க்கவும் வலிகளைத் தாங்கிக்கொள்ளவும் தியானம் செய்யுங்கள். அந்த தியானத்தால் மனம் சுத்தமாகும். புதிய பாவங்கள் சேராது. நம்மால் முடிந்தவரையில் தியானம் செய்யவேண்டும். சிலர் தியானம் செய்ய நேரம் இல்லையே என்று சொல்லிக் கொண்டிருப்பார்கள். விருப்பம் உறுதியாக இருந்தால் நேரம் கிடைக்காமல் போகாது. தேவையற்ற வம்பு விமர்சனங்களில் செலவாகிற நேரத்தை குறைத்துக்கொண்டால் நீங்களும் தியானம் செய்ய பழகிக்கொள்ளலாம்." என்று காஞ்சி பெரியவர் கூறியுள்ளார்.

## ஞானம் உருவாகும் நேரம்

ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ஸர் கூறுகிறார்: மனிதனின் மனம் கடுகுபொட்டலம் போன்றது. அந்தப் பொட்டலம் கிழிந்து, கடுகு நாலாப் பக்கங்களிலும் ஓடிவிட்டால் அதை ஒன்று சேர்ப்பது கடினம். அதுபோல் மனம் பலவழிகளில் சென்று உலக விஷயங்களுடன் ஈடுபட்டிருக்கும்பொழுது அதைக் குவித்து ஒருமுகப்படுத்துவதும் சுலபமல்ல. இறைவன் வெளியிலும் வெகுதொலைவிலும் இருப்பதாகத் தோன்றும் வரையில் அஞ்ஞானம் இருக்கும். ஆனால், நம் உள்ளத்துக்குள்ளேயே அவன் இருப்பதாக உணர்ந்துகொண்டால் ஞானம் உண்டாகிவிடும்.

இறைவன் எல்லோரிடமும் இருக்கிறான். அவனை வெளியே தேடுவது அறியாமை. ஒவ்வொருவருக்குள்ளேயுமே அவன் இருக்கிறான். அந்த இறைவனை உணர்வதே அறிவு. மனதில் இறைவனை உணர்ந்தவனே உலகில் சேர்ந்து வாழ்வான். எல்லா மனிதர்களிடமும் இறைவன் இருக்கிறான். ஆனால் இறைவனிடத்தில் எல்லா மனிதர்களும் இல்லை. இதுதான் அவர்கள் துன்பப்படுவதற்குக் காரணம்."

கர்மவினையைப் பற்றிய ஓர் உதாரணத்தை குருதேவர் ஸ்ரீ ஸ்ரீ பரமஹம்ஸர் கூறுகிறார்: "எவ்வாறு ஒரு ஞானி மற்றவரது தீய கர்மவினைகளைத் தன்மீது ஏற்றுக்கொள்ள முடிகிறது?" என்று ஒரு சீடர் கேட்டார். குருதேவர் பதிலளித்தார்: "ஒரு மனிதர் மற்றொருவரை அடிக்கப் போவதை நீங்கள் பார்த்தால், அடிபடப் போகிறவரின் முன்னால் சென்று அந்த அடி உங்கள் மேல் விழும்படி நீங்கள் செய்யமுடியும். அதைத்தான் ஓர் உயர்ந்த குரு செய்கிறார். பழைய தீயவினையின் விரும்பத்தகாத விளைவுகள் தனது பக்தர்களின் வாழ்வில் அவர்களைத் தாக்கப்போவதை அவர் தெரிந்துகொள்கிறார். அவர்,

மாதம் இரண்டு முறை
இலவசமாக வெளிவரும்
"ஆன்மிகமலர் மெயில் புத்தகம்"
aanmeegamalar.com
இணையதளத்தில்
இலவசமாக டவுன்லோடு
செய்தும் படிக்கலாம்

அது விவேகமானதுதான் என்று கருதினால், ஒரு குறிப்பிட்ட பரதத்துவ முறையைப் பயன்படுத்துவதன் மூலம், தன் சீடர்களுடைய தவறுகளின் விளைவுகளை தனக்கே மாற்றிக்கொள்கிறார். காரணகாரிய விதிமுறை இயந்திரத்தனமாகவோ அல்லது கணிதமுறையிலோ செயல்படுகிறது. யோகிகள் அதனுடைய ஓட்டத்தை எவ்வாறு திருப்புவது என்பதை அறிந்துள்ளனர்."

நம் கர்மாக்களுக்கெல்லாம் காரணம் ஆசைதான். அதற்கான ஓர் எடுத்துக்காட்டு:

1. ஒரு வியாபாரி பொருளை வாங்கிவிற்றான். அவனுக்கு லாபம் கிடைத்தது. மற்றொரு வியாபாரி இதே மாதிரி வாங்கி விற்றான். நஷ்டம் ஏற்பட்டது. இவ்வாறு லாபமோ நஷ்டமோ ஏற்படுவது நல்ல அல்லது தீயச் செயல்களால் ஏற்பட்ட ப்ராரப்த வினையின் பலன். ஆனால் பொருள் வாங்குவது அவர்கள் தாம் கொண்ட இச்சைப்படி நடந்ததாகும்.
2. ஒரு மனிதன் எங்கேயோ சென்றுகொண்டிருந்தான். இடையே எதிர்பட்ட ஓர் ஆற்றில் பணத்துடன் ஒரு பெட்டி மிதந்து வந்தது. அதை அவன் எடுத்துக்கொண்டான். மற்றொருவன் எங்கேயோ சென்றுகொண்டிருந்தான். அப்பொழுது ஒரு மரத்தின் கிளை ஒடிந்து அவன் தலையில் விழுந்து காயம் ஏற்பட்டது. இங்கே பணம் கிடைப்பதோ, காயப்படுவதோ அவர்கள் செய்த நல்ல, தீய செயல்களால் ஆன கர்மங்களின் ப்ராரப்த கர்மத்தின் விளைவு ஆகும். ஆனால் பணப்பெட்டி கிடைப்பதோ ஒடிந்த கிளை விழுவதோ அவர்கள் இச்சைப்படி நடக்காமல் தெய்வத்தின் விருப்பப்படி நிகழ்ந்ததாகும்.

நம் கர்மவினைகள் தீர்ந்தால் மட்டுமே நாம் இறைவனை அடையமுடியும். கர்மவினைகள் தீர வேண்டுமென்றால் குரு தேவை. குருவினால் மட்டும்தான் கர்மாவை துடைக்கமுடியும். குருவை முதலில் தேர்ந்தெடுக்கவேண்டும். இந்த விஷயத்தில் கவனம் மிகவும் அவசியம். சரியான குருவை தேர்ந்தெடுக்கவில்லையெனில் ஏற்கனவே இருக்கும் கர்மவினைகளுடன் மேலும் கர்மவினைகள் அதிகரிக்க நேரும். இதற்கு இறைவனின் கருணையும் தேவை. அனைத்தையும் அருளி வழங்குபவன் இறைவனே! அதற்கு இறைவனுடன் தொடர்புடைய அல்லது இறைவனை எப்பொழுதும் நினைக்கின்ற ஒரு மனிதன் அவனுடைய கருணை கிடைக்கப்பெறுவான். உலகப் பொருள் மேல் எவ்வித ஆசையும் இல் லாத ஒருவன் அவன் மனதை வேறு எங்கே வைப்பான் என்றால் அது இறைவனுடன் மட்டும்தான். அவ்வாறான ஒரு பக்தனுடைய கர்மவினைகளைத் துடைப்பதற்காக இறைவனே, இறைவனுடன் இணைந்த குருவை அவனிடத்தில் அனுப்பிவைப்பான். குரு வந்தபின்னர் குருவிடம் விசுவாசமாக இருக்கவேண்டும். குருதேவர் கூறுகிறார்: "குருவும் சீடனும் ஒரு பிறவியில் மட்டுமல்லாமல் அநேக பிறவியிலும் இறைவனை அடைவதற்கு இவை தேவையென்றால் ஒருவருக்கொருவர் விசுவாசமாக இருக்கவேண்டியது கடமையாகும். குரு மீது நூறு சதவீதம் விசுவாசம் கொண்டவர்கள் இறுதியான முக்தியையும் வீடுபேற்றையும் அடைவதுபற்றி நிச்சயமாக இருக்கலாம். ஒருவனுக்கு அநேக ஆசிரியர்கள் இருக்கலாம். ஆனால் குரு, ஒருவர் மட்டும்தான். அவனது அநேக விதமான பிறவிகளிலும் அச்சீடனின் இறுதி லட்சியமான இறைவனின் வீடுபேறு அடையும்வரை அவனுடைய குருவாக இருக்கிறார். ஒருமுறை இந்த உறவு ஏற்பட்டவுடன் இதை நீங்கள் அனைவரும் ஞாபகம் வைத்துக்கொள்ளவேண்டும்".

மீண்டும் மலரும்...

குருப்ரியா Cell No.9894595909

## வெற்றிக்கான டிப்ஸ்

வேலை இண்டெர்வியூ அல்லது ஏதேனும் புதிய தொழில், முயற்சி தொடங்குமுன், சம்பந்தபட்டவரை கிழக்கு முகமாக நிறக வைத்து மூன்று முறை தலையை வலது புறமாக சிறிது பச்சை பயிரை வைத்து சுற்றி பின்பு அவர் மேல் தூவி விட வேண்டும். அவர் சென்றதும் அவற்றை கூட்டி வெளியில் பறவைகளுக்கு கொட்டி விடலாம். இது செயலில் வெற்றியை தேடித்தரும்.

– மலர், கோவை.



## கோவிலில் அவசியம்

# கடைபிடிக்கவேண்டியவை

- ❖ பிரகாரம் வலம் வரும் பொழுது வேகமாக நடக்க கூடாது.
- ❖ வீண் வார்த்தைகளும், தகாத சொற்களும் பேசுதல் கூடாது.
- ❖ சோம்பல் முறித்தல், தலை சிக்கெடுத்தல், தலை விரித்துப் போட்டு கொண்டு செல்லுதல், வெற்றிலை பாக்கு போடுதல் கூடாது.
- ❖ பிறப்பு, இறப்பு, தீட்டுக்களுடன் செல்ல கூடாது.
- ❖ கைலி, தலையில் தொப்பி, முண்டாசு அணிய கூடாது.
- ❖ கொடிமரம், பலிபீடம்,நந்தி, கோபுரம் நிழலை மிதிக்க கூடாது.
- ❖ கவர்ச்சியான ஆடைகள் அணியக் கூடாது.
- ❖ நந்தி தேவருக்கும் சிவலிங்கத்திற்கும் இடையில் போகக் கூடாது.
- ❖ தரிசனம் செய்தபின் பின்னால் சிறிது தூரம் நடந்து, பின்னர் திரும்ப வேண்டும்.
- ❖ ஒரு கையால் தரிசனம் செய்ய கூடாது.
- ❖ மேலே துண்டுடன் தரிசனம் செய்ய கூடாது.
- ❖ கோவிலுக்குள் உண்ண, உறங்க கூடாது.
- ❖ கோவிலுக்குள் உயர்ந்த ஆசனத்தில் அமர கூடாது.
- ❖ பலிபீடத்திற்கு உள்ளே சந்நிதியில் யாரையும் வணங்க கூடாது.
- ❖ கோவில் சொத்துக்களை எவ்விதத்திலும் அபகரிக்கவோ அனுபவிக்கவோ கூடாது.
- ❖ அஷ்டமி,நவமி, அமாவசை, பௌர்ணமி, மாத பிறப்பு, சோமவரம், பிரதோஷம், சதுர்த்தி, இந்த தினங்களில் வில்வம் பறிக்கக் கூடாது.
- ❖ ஆலயத்தில் புகைப்படம் எடுக்க கூடாது.
- ❖ தெய்வ வழிபாடு ஈர துணி கூடாது.
- ❖ கோவிலுக்குள் குளிக்காமல் செல்ல கூடாது.
- ❖ சந்நிதியில் தீபம் இல்லாமல் தரிசனம் செய்யக் கூடாது.
- ❖ கோவிலுக்கு சென்று வந்தபின் உடனடியாக கால்களை கழுவக் கூடாது. சிறிது நேரம் அமர்ந்த பிறகு தான் கழுவிக்கொள்ள வேண்டும்
- ❖ கோவிலுக்குள் நுழைந்தது முதல் வெளியே வரும் வரை நிதானமாக அவசரம் இன்றி கடவுளை நமக்குள் உணர்ந்து ஓம் நமசிவாய மந்திரம் கூறி வழிபடுவது மிக சிறந்ததாகும்.
- ❖ கோவிலில் நுழையும் போதும் திரும்பி வரும் போதும் கோபுர தரிசனம் அவசியம்.
- ❖ ஸ்தல விருட்சங்களை இரவில் வழிபட கூடாது.
- ❖ கோவில் உள்ளே உரக்க பேசுதல் கூடாது.
- ❖ நம்முடைய பேச்சுக்களோ செயல்களோ அடுத்தவர்களுடைய வழிபாடையோ, தியானத்தையோ இடையுறு செய்ய கூடாது.





# புண்ணியம் செய்யாதவர் கூட, நல்ல பிள்ளையை பெற்றால் சொர்க்கம் செல்லலாம்

இரண்யனைக் கொல்வதற்காக நரசிம்மர் தூணில் இருந்து வெளிப்பட்டார். அதிபயங்கர உருவம். சிங்க முகம்...மனித உடல்...இதுவரை பார்க்காத வித்தியாசமான அமைப்பு.

இதைப் பார்த்தார்களோ இல்லையோ...இரண்யனின் பணியாட்கள் தங்கள் ஆயுதங்களைப் போட்டுவிட்டு ஓடிவிட்டனர்.

தனிமையில் நின்ற இரண்யனை மகாவிஷ்ணு அப்படியே தூக்கி மடியில் வைத்தார். குடலைப் பிடுங்கி மாலையாகப் போட்டார். இதைக் கண்டு வானவர்களே நடுங்கினர்.

அவர்கள் நரசிம்மரைத் துதித்து சாந்தியாகும் படி வேண்டினர். பயனில்லை. மகாலட்சுமி கூட அவர் அருகில் செல்ல பயந்தாள்.

“என் கணவரை இப்படி ஒரு கோலத்தில் நான் பார்த்ததே இல்லை. முதலில் யாரையாவது அனுப்பி அவரை சாந்தமாக்குங்கள், பிறகு நான் அருகில் செல்கிறேன்,'' என்றாள்.

அவர் அருகில் செல்லும் தகுதி, பக்தனான பிரகலாதனுக்கு மட்டுமே இருந்தது. தேவர்கள் அவனை நரசிம்மர் அருகில் அனுப்பினர். பிரகலாதன் நரசிம்மரைக் கண்டு கலங்கவில்லை.

அவனுக்காகத்தானே அவர் அங்கு வந்திருக்கிறார்!

தன்னருகே வந்த பிரகலாதனை நரசிம்மர் அள்ளி எடுத்தார். மடியில் வைத்து நாக்கால் நக்கினார்.

“பிரகலாதா! என்னை மன்னிப்பாயா?''





என்றார். அவனுக்கு தூக்கி வாரிபோட்டது.

“சுவாமி! தாங்கள் ஏன் இவ்வளவு பெரிய வார்த்தையைச் சொல்லுகிறீர்கள்?'' என்றான்.

“உன்னை நான் அதிகமாகவே சோதித்து விட்டேன். சிறுவனான நீ, என் மீது கொண்ட பக்தியில் உறுதியாய் நிற்பதற்காக பல கஷ்டங்களை அனுபவித்து விட்டாய். உன்னைக் காப்பாற்ற மிகவும் தாமதமாக வந்திருக்கிறேன். அதற்காகத்தான் மன்னிப்பு,'' என்றார்.

இதைக்கேட்டு பிரகலாதனுக்கு கண்ணீர் வந்துவிட்டது.

“மகனே! என்னிடம் ஏதாவது வரம் கேள்,'' என்ற நரசிம்மரிடம்,

“ஐயனே! ஆசைகள் என் மனதில் தோன்றவே கூடாது,'' என்றான்.

பணம் வேண்டும், பொருள் வேண்டும் என அந்த மன்னாதி மன்னன் கேட்டிருக்கலாம். ஆனால், ஆசை வேண்டாம் என்றான் பிரகலாதன்.

குருகுலத்தில் அவன் கற்றது சம்பாதிக்க அல்ல! பண்பாட்டை வளர்த்துக் கொள்வதற்கு!

பிரகலாதனின் இந்தப் பேச்சு நரசிம்மரின் மனதை உருக்கிவிட்டது. பகவானைக் கண்டு பக்தன் தான் உருகுவான். இங்கோ கோபமாய் வந்து, வேகமாய் இரண்யனின் உயிரெடுத்த பகவான் பக்தனைக் கண்டு உருகி சாந்தமாகிப் போனான் நரசிம்மப் பெருமான்.

“இந்த சின்ன வயதில் எவ்வளவு நல்ல மனது! ஆசை வேண்டாம் என்கிறானே!'' ஆனாலும், அவர் விடவில்லை. விடாமல் அவனைக் கெஞ்சினார், “இல்லையில்லை! ஏதாவது நீ கேட்டுத்தான் ஆக வேண்டும்,''.

பகவானே இப்படி சொல்கிறார் என்றால், “தன் மனதில் ஏதோ ஆசை இருக்கத்தான் வேண்டும்‘ என்று முடிவெடுத்த பிரகலாதன்,

“இறைவா! என் தந்தை உங்களை நிந்தித்து விட்டார். அதற்காக அவரைத் தண்டித்து விடாதீர்கள். அவருக்கு வைகுண்டம் அளியுங்கள்,'' என்றான்.

நரசிம்மர் அவனிடம்,

“பிரகலாதா! உன் தந்தை மட்டுமல்ல! உன்னைப் போல நல்ல பிள்ளைகளைப் பெற்ற தந்தையர் தவறே செய்தாலும், அவர்கள் பரமபதத்திற்கு வந்துவிடுவார்கள். அவர்களின் 21 தலைமுறையினரும் புனித மடைவர்,'' என்றார்.

## ஆண்டவனின் அருளைப் பெற்று நலமுடன் வாழ எளிய வழி



குழந்தைகளுக்கு நல்ல விஷயங்களை எடுத்துச் சொல்லி அதை கேட்டு அவர்கள் நல்ல பழக்க வழக்கங்கள் மேற்கொள்வது அறுதிவிட்டது .அக்குறையைப் போக்க அதிர்ஷ்டவசமாக. சத்சங்கங்கள் தலை எடுத்தன. காலை முதல் இயந்திரத்துடன் பழகுவதால் நம் பழக்க வழக்கங்களும் கூட இயந்திரமயமாகி விட்டது.ஆய்ந்து ஓய்ந்து வீட்டிற்கு அசதியாக வருகிறோம். எல்லோரும் சம்பாதிக்க வேண்டியதுதான் உத்தியோகம் , சம்பாத்யம் எல்லாம் வயிற்று பாட்டிற்குத்தான். உத்தியோகம் செய்வதால் தான் பணம் கிடைக்கிறது. வயிற்றுக்காகவே பல காரியங்களும் செய்கிறோம் இருந்தும் மன அமைதி இல்லை.

சம்பாத்திபதும் சாப்பிடுவதும் எதற்கு என்று புரிந்துகொண்டால் மன அமைதி தானாக ஏற்படும் அமைதி வேண்டாம் என்றால் உத்யோகமா வேண்டாம் சம்பாதியமும் வேண்டாம்.

ஆண்டவனின் நினைப்பு இருந்தால் எல்லாவற்றையும் பற்றி வேறுமாதிரி நினைத்து கஷ்டப்பட மாட்டோம். ஆனால் மனதிற்கு நிம்மதி இல்லாதபோது தான் இறைவனை நினைக்கிறோம். உலகம் இப்படி ஆகிவிட்டதே என்று கவலை வந்து விட்டது அந்த கவலை தீர ஆண்டவன் ஒருவன் இருக்கின்றான் .அவன் ஆணைக்கு உட்பட்டு தான் இந்த உலகில் காரியங்கள் அனைத்தும் நடக்கிறது என்ற நம்பிக்கை ஏற்பட்டு விட்டால் அமைதிக்கு பங்கம் ஏற்படாமல் ஆண்டவனை நினைவில் வைத்தால் பரம் பொருளின் பரிபூரண அருளைப் பெருக்கி நலம் பெறலாம்.

– பூஜ்ய ஸ்ரீ ஜெயேந்திரர்

# கடும் சோதனைகள்

## வருவது ஏன்?

கடவுள் ஏன் நம்மை இப்படி சோதிக்கிறார்

சுகத்தை மட்டும் விரும்பி ஏற்கிற மனிதன், கஷ்டம் வரும்போது அதை பொறுத்துக் கொள்ள மாட்டேன் என்று சொன்னால், அவன் இறைவனையோ, இயற்கையையோ, புரிந்து கொள்ளவில்லை என்று தான் அர்த்தம்.

கடவுள் நம்மை சோதிப்பதெல்லாம் இல்லை. அது ஒரு தவறான நம்பிக்கை. அவர் நமக்காக நம் கர்ம விதியை சரிவர நடத்தி வைக்கிறார். அவர் மேலும் நமக்கு நம் தலைவிதியை இறை வழிபாட்டின் மூலம் மாற்றியெழுத முழுச் சுதந்திரமும் கொடுத்திருக்கிறார்.

நாம் கடவுளின் சோதனை என்று சொல்வது, நமக்கு நாமே, ஏற்படுத்திக் கொண்டிருக்கும் விளைவுகளேயன்றி வேறல்ல.

மக்களிடம் ஆச்சரியப்பட வைக்கும் விஷயம் என்னவென்றால், கஷ்டங்களை அனுபவிக்கும்போது, ஏன் எனக்கு, என்பவர்கள், அவர்கள் வளர்ச்சி யடைகையில், எனக்கு ஏன் இந்த வளர்ச்சி, என்று கேட்பதேயில்லை!

எனக்கு மட்டும் ஏன் இத்தனை கஷ்டம் என்பவர்கள், என்றாவது எனக்கு மட்டும் ஏன், இந்த மாருதி கார், ஹீரோ ஹோண்டா பைக், சாம்சங் கலக்ஸி மொபைல், லேப் டாப், ஐ.டி கம்பனி வேலை, வங்கியில் பணம் ,வீடு, நகை, வெளிநாட்டுப் பயணம், என்று கேட்டதுண்டா..?

வைரம் அறுக்கப்படாமல் பளபளப்பாகாது, மின்னாது,

தங்கம் நெருப்பில் புடம் போடாமல் புனிதமாகாது.

நல்லவர்கள் சோதனைக்கு உள்ளாவார்கள், ஆனால் வேதனைப்பட மாட்டார்கள். வாழ்வின் அனுபவங்கள் அவர்களை சிறப்பிக்குமே தவிர கசப்பிக்காது.

ஆரம்பதிலிருந்து கடைசி வரை கஷ்டப்பட்டே வாழ்ந்து செத்தவர்கள் இந்த உலகத்தில் யாரும் கிடையாது. அதேபோல பிறந்த தேதியிலிருந்து இறுதிவரை சந்தோஷத்துடனே வாழ்ந்து மடிந்தவர்களும் கிடையாது.

கஷ்டப்படுகிறவர்களுக்கு, துன்பம் அனுப வித்தவர்களுக்கு, ஆண்டவன் ஒரு நாள் உதவாமற் போக மாட்டான். எப்பொழுதுமே கஷ்டப்படட்டும் என்று, யாரையும் ஆண்டவன் அப்படியே விட்டுவிட மட்டான்.

விதிக்கப்பட்ட தடைக் கற்கள் தரும் பாடங்களே போராட்டங்களிலும் சகிப்பிலுமே மன வலிமை வரும். சோதனைகள் என்பது மனோதிடத்தை அதிகரிக்க உதவும்

சில சமயங்களில், அவர் நம்மைக் கைவிட்டு விட்டாரோ என்று தோன்றுகிறது. ஏனெனில், நாம் அவரைக் காண முடிவதில்லை. சோதனை வேளைகளில் நாம் காணமுடியாதவாறு அவர் நம்மோடே இருக்கிறார்.

அவருடைய கண்கள் நம்மீது எப்போதும் நோக்கமாயிருக்கின்றன. எனவே, நற் சிந்த னையுடன், அவரது நாமமே ஜபித்து, அவரை



வணங்கி, அவரிடம் சரண் அடைந்தால், நாம் நமது சோதனைகளையும், கர்ம வினைகளையும், பயமின்றி கடந்து சாதனையாக்கலாம்.

உங்கள் பிரச்சனை பெரிதாக இருந்து, அதை சமாளிக்க கூடிய கொள்ளளவு உங்களிடம் இல்லையென்றால், சோர்ந்து விடாதீர்கள், உங்க ளது அனைத்து முயற்சி களும் தீர்ந்து போகும் போது, கடவுளின் கருணை ஆரம்பமாகும்.

கடந்த காலத்தை கலக்கமில்லாமல் உணர்ந்து கொள்ளுங்கள்

நிகழ் காலத்தை ஊக்கத்துடன் அணுகுங்கள்.

வருங்காலத்தை தைரியமாக எதிர்கொள்ளுங்கள்.

கிடைக்காததையும் தவறவிட்டதையும் நினைத்துத் தளராதீர்கள்

பயத்தைக் களைந்து நம்பிக்கையை தக்க வையுங்கள்

சந்தேகங்களை நம்பாதீர்கள்

நம்பிக்கையை சந்தேகிக்காதீர்கள்.

உங்களுக்கு கிடைத்த வரங்களை எண்ணில் கொள்ளுங்கள்.

கடவுளை நம்புங்கள் அவர் நல்லவர்களைக் கை விட மாட்டார்

எல்லாம் அவன் செயல்.

– மஹா பெரியவா



# குரு என்றால் யார்?



ஸாதனை என்ற வார்த்தையின் அர்த்தம்...

ஈச்வரனை அடைய ஒவ்வொரு நாளும் குறைந்தபட்சம் 23 மணி நேரம் உடல், மனம் மற்றும் புத்தியால் செய்யப்படும் முயற்சியே ஸாதனையாகும்.

அ. அர்த்தம் மற்றும் விளக்கம்

1. சிஷ்யனின் அஞ்ஞானத்தைப் போக்கி, அவனது ஆன்மீக முன்னேற்றம் ஏற்பட, யார் அவனுக்கு ஸாதனையைக் கற்றுத் தந்து, செய்விக்கின்றாரோ, யார் அவனுக்கு ஆன்மீக அனுபவங்களை அருளுகின்றாரோ அவரே குரு எனப்படுகிறார். குருவின் கவனம் சிஷ்யனின் உலக சுகங்களில் இருப்பதில்லை (ஏனென்றால் அவை விதிப்படி நடக்கின்றன), மாறாக சிஷ்ய னின் ஆன்மீக முன்னேற்றத்திலேயே உள்ளது.

2. பரமேச்வரனின் அருளை வழங்கும் சக்தி ஸ்வரூபமே குரு ஆகும்.

ஆ. குரு தத்துவம் ஒன்றே

குரு என்பது ஸ்தூல தேஹம் (உடல்) அன்று. குருவின் ஸூட்சும தேஹமும் (மனம்) காரண தேஹமும் (புத்தி) கரைந்து போனதால் அவரால் விச்வமனம் மற்றும் விச்வபுத்தியோடு ஒன்ற முடிகிறது. அதாவது எல்லா குருமார்களின் மனமும் புத்தியும் விச்வமனம் மற்றும் விச்வ புத்தியோடு ஒன்றியதால் அவர்கள் அனைவரும் ஒருவரே. உருவத்தால் அவர்கள் பலவாறாகத் தெரிந்தாலும் தத்துவத்தால் அவர்கள் அனைவரும் ஒன்றே. நிர்குண தெய்வ தத்துவத்தின் ஸகுண ரூபமே குரு. எவ்வாறு பசுவின் மடியிலுள்ள எந்த காம்பிலிருந்து கறந்தாலும் வெள்ளை நிற சுத்தமான பால் கிடைக்கிறதோ, அதேபோல் ஒவ்வொரு குருவிடமும் உள்ள குரு தத்துவம் ஒன்றாக இருப்பதால் அவர்களிடமிருந்து ஒரேபோல் ஆனந்த அதிர்வலைகள் வெளிப்படுகின்றன. சமுத்திரத்தின் அலைகள் எவ்வாறு கரையை நோக்கி வந்து கொண்டே இருக்கிறதோ அதே போல் ப்ரம்மத்தின், ஈச்வரனின் அலைகளான குருமார்கள் சமூகத்தை நோக்கி வந்து கொண்டே இருக்கின்றனர். எல்லா அலைகளிலுள்ள நீரிலும் சுவை ஒரே மாதிரி இருப்பதுபோல் எல்லா குருமார்களின் தத்துவமும் ஒன்றேயான ப்ரம்மமாக உள்ளது. தண்ணீர் நிரம்பிய பாத்திரங்கள் சிறிது பெரிதாக இருந்தாலும் உள்ளே இருக்கும் தண்ணீர் ஒன்றே; மின்சார விளக்குகளின் வடிவமைப்புகள் விதவிதமாக இருந்தாலும் அதிலிருந்து வெளிப்படும் ஒளி ஒன்றே; அதே போல் குருமார்கள் பலவிதமாக காட்சி அளித்தாலும் அவர்களிடம் உள்ள குரு தத்துவம் (தெய்வ தத்துவம்) ஒன்றே.

– தகவல் ஸனாதனின் கையேடு மற்றும்
www.hindujagruti.org
தொடர்பு : 09380949626




ஆசிரியர், வெளியீட்டாளர்
C.நாகராஜன்
செல்: 8825844033
♦♦♦
இணை ஆசிரியர்
முருகன் செல்: 7338881773
♦♦♦
துணை ஆசிரியர்கள்
ஷியாம்சுந்தர், சஞ்சனா, ஸ்ரீபதி,
குருபிரியா செல்: 9894595909
மூ.சக்திவேல் செல்: 9787576858
புனிதவேல் செல்: 9841807572
♦♦♦
வடிவமைப்பு
பான்ராஜாகிராபிக்ஸ்
செல்: 08825844033

நிர்வாக அலுவலகம்
aanmeegamalar.com
நெ.16/18, பாரதீஸ்வரர் காலனி, 4வது தெரு,
கோடம்பாக்கம், சென்னை 600024.
08825844033

ஆசிரியர் குழுவில்
நீங்களும் இணையலாம்

நமது ஆன்மிகமலர்.காம் இதழின் ஆசிரியர் குழுவில் இணைந்து செயல்பட உங்ளுக்கு வாய்ப்பு தரப்படுகிறது. ஆன்மிகம் சம்பந்தப்பட்ட விஷயங்களை எழுத ஆர்வமுள்ள அன்பர்கள் எங்களை தொடர்பு கொள்ளுங்கள், விளம்பரம் பெற விரும்புபவர்களும் எங்களை தொடர்பு கொள்ளவும். உங்களை எங்களுடன் ஒருவராக இணைத்துக் கொள்கிறோம்.

தொடர்பு கொள்ளவும்
8825844033



# தேக அபிமானம், மன அபிமானம் இவைகளை உலகத்தோடு இணைத்து சிந்திக்காதே...

- யார் எவர் என்று பாராமல் எவராய் இருந்தாலும் ஒருவர் ஒரு நன்மையை உலகத்திற்கு உற்பத்தி செய்துவந்தால் அந்த நன்மை ஒரு நாய்க் குடையைப் போன்றது. பிறரது நன்மையில் நாம் தங்கி உலக வாழ்க்கை நடத்தமுடியுமா? மனிதா நீ சிந்தி. உனது குருநாதன் புத்தனைப் பார்த்து நான் எவ்வளவோ தெரிந்து கொண்டேன். அளவிலா மகிழ்ச்சிகொண்டேன். நீயும் அப்படியே சூல்பெறு கருப்பெறு.
- கருப்பெறாத தாய்க்கு சந்ததி இல்லை. அதுபோல கருப்பெறாத மனிதர்க்கு சிந்தனை இல்லை. நீ உனது சிந்தனைக்கருவை எங்கோ முட்புதரில் எப்படியோ தொலைத்துவிட்டாய். ஒவ்வொரு நாளும் இன்ப துன்பங்களைப் பற்றி மட்டுமே பேசிக்கொண்டு வாழுகிறாய். பயனே இல்லை. இப்படியே கருப்பெறாமல் இருந்தால் மனிதர்கள் அனைவரும் ஜீவமரணப் போராட்டத்துக்கு மத்தியில் வாழ்க்கையை இழுத்துக் செல்லுவார்கள்.
- எனது எழுத்துக்கள் உன்னை ஆட்டிப்படைக்கின்றனவா என்று பார். ஆட்டிப்படைக்கும்படியாக நாம் இருக்கக்கூடாது. நீ உன்னை அப்படி வைத்துக் கொள்ளவேண்டும். ஒருவரை ஒருவர் கண்டு பயப்படுவது என்பது சரியல்ல. தேக அபிமானம், மன அபிமானம் இவைகளை உலகத்தோடு இணைத்து சிந்திக்காதே. எவரும் ஆட்டிப்படைக்க முடியாத உயிரை தேவையற்ற பொருள்கள் ஆட்டிப்படைத்துவிடும். இதற்கு இடம் கொடுக்காமல் இருப்பதே நல்ல வழி.
- தானாக இயங்கமுடியாத பொம்மைகளை நுண்ணிய நூல்களைக் கட்டி தனது இஷ்டப்படி இழு க்கிறான். இந்த பொம்மலாட்டத்தை கவனித்தேன். எப்பொழுதும் நாமாகவே இயங்கவேண்டும். பொம்மலாட்ட இயக்கத்திற்கு மனித வர்க்கத்தில் இடமே இல்லை. ஒரு கருத்தும் உன்னை ஆட்டிப்படைக்கவில்லை என்றால் இயங்குகின்ற வரை நீயாக உனது கைகால்களை வீசி ஓயாமல் நட. இரண்டாவது ரோஜா இதழ் கீழே உதிர்ந்து விழுந்தது. நீ என்ன எண்ணுகிறாயோ என்னமோ தெரியவில்லை? வாட் டு யூ மீன்? நீ ஒன்றும் எண்ணவில்லை என்றால் உனக்கு ஒரு பொன்மொழியும் தேவையில்லை.



## சீடனும் ஞானிகளும்

**சீடன்:** பொது அறிவு விழித்துக் கொண்டால்?

**ஞானி:** விருப்பம் வந்து பக்தனாவாய். அப்பொழுது குரு, கோவில், சிஷ்யன், மதம், ஜாதி, உயர்வு, தாழ்வு என்ற குண பேதங்கள் மறைந்துவிடும்.

**சீடன்:** பொது அறிவினால் கிடைக்கும் வேறு பலன் என் ன?

**ஞானி:** பொது அறிவு இருந்தால் தான் பக்தியே தோன்றும். மிக உன்னத பலன் ஏகாந்தத்தை இரசிப்பாய்.

**சீடன்:** கடவுளின் நிலை என்ன இந்த தத்துவத்தில்?

**ஞானி:** யார் ஆண்டவனிடத்தில் மனதை வைக்க முடியும் என்ற கேள்வி எப்பொழுதும் உள்ளது. பகுத்தறிவுள்ள அனைவரும் என்பதே இந்த தத்துவத்தின் விளக்கம்.

**சீடன்:** உலகிலுள்ள அனைவருமா?

**ஞானி:** ஆம். கடவுளும், பயனுமே உலகம். உலகிலே பயன் இருப்பதால் தான் கடவுளே இருக்கிறான்.

**சீடன்:** நீங்கள் எப்பொழுதும் ஏன் கடவுளையே பிடித்துக் கொள்கீறீர்கள்?

**ஞானி:** பஞ்சபூதங்களில் மண்ணின் அளவே மனிதனுக்கு ஓரளவு தெரிகிறது. மீதி நான்கும் தெரியாத விஷயங்கள். பஞ்ச பூதங்களை உற்பத்தி செய்த இறைவனையே பிடித்துக் கொண்டால் பிரபஞ் சத்தைப் பற்றிய அறிவு இல்லையே என்ற பயம் நிங்கி எதையும் ஞானத்துடன் எதிர் நோக்கலாம் என்பதால்.

**சீடன்:** சராசரி மனிதர்களின் நிலை என்ன?

**ஞானி:** தெய்வ பலம் இல்லாததால் தான் எல்லோரும் கூட்டம் கூட்டமாக உள்ளனர். காரணம், பயம். இது எல்லாத் துறைக்கும் பொருந்தும். துன்பம் வந்தால் எல்லோருக்கும் வரட்டுமே என்று தனியாக குரல் கொடுக்க வருவதில்லை.

– ஞானச்சேரி ஞானிகள் –
பூஜ்ய ஸ்ரீசத்குரு சதாசிவ பிரும்மேந்திரரின் அருளுரையிலிருந்து தொகுத்தது மேலும் விபரங்களுக்கு எஸ்.மகாதேவன், போன் 098410 28028

# “ஆ(ம்)ஹா பாரதம்”

பாகம் 18

கருடனின் பாதம் பட்ட மறுகணமே கிளை உடைந்து கீழே விழும் தருணம் தம் அலகினால் அக்கிளையைப் பிடித்து விட்டார். அக்கிளையை எடுத்துப் பார்க்கும் போது தான் அதில் தலைக்கீழாய் பாலகில்யர் எனும் மகரிஷிகள் தொங்கிக் கொண்டிருப்பதைக் கண்டார். அவர்களின் உயிருக்கு ஏதும் கேடு வராதபடி காக்க வேண்டி தன் அலகினாலேயே மிக எச்சரிக்கையோடும் பாதுகாப்பாகவும் பற்றியிருந்தார்.

தேவர்களாலும் செய்ய முடியாத அரிய செயலை; நாகங்களை உண்டு வானில் பறந்து செல்லும் இந்த பக்ஷிராஜன் செய்தபடியால் இவருக்கு “கருடன்” என்று பெயர் வைத்தனர். இரண்டு கால்களிலும் ஆகாரமும், அலகில் புண்ணியத்திற்கான ஆதாரமும் கொண்டு அங்குமிங்குமாய் அலைந்து திரிந்தார். எந்த மரங்களும் இவரது பலத்தை தாங்கும் வல்லமைப் பெற்றிடாத காரணத்தால் கந்தமாதன பர்வதத்திற்கு வந்து சேர்ந்தார். அங்கு தவமிருந்தத் தன் தந்தையைக் கண்டார்.

தந்தையிடம் விஷயத்தை தெரிவித்ததும் அவர் “மகனே ! பாலகில்யமகரிஷிகள் சூரிய கிரணங்களை மட்டுமே அருந்துவர். அவர்களுக்கு ஏதும் தீங்கு வராதபடி பார்த்துக் கொள்ளவும். அவர்கள் கோபத்தால் எவரையும் எரித்து விடக் கூடியவர்கள்” என்றார். பின் கச்யபரே பாலகில்ய மகரிஷிகளிடம் சென்று “என்மகன் மிகுந்த வீரமுடையவன் பராக்கிரமசாலியானாலும் ஒரு போதும் தீமையை செய்யாதவன். மக்களின் நலன் பொருட்டு நன்மையைச் செய்யப் போகிறான். ஆதலால் நீங்கள் அவனுக்கு ஆசி கூறி வழியனுப்ப வேண்டும்” என்று வே ண் டி க் கொண்டார்.



கச்யபரின் வேண்டுகோளை ஏற் றுக் கொண்ட பாலகில்ய மகரிகள் கருடனை ஆசிர்வதித்து விட்டு தாங்கள் தவம் செய்ய இமயமலைக்குச் சென்று விட்டனர். அவர்கள் சென்ற பின் கிளையை எங்கு விடுவது என்று தந்தையிடம் கேட்டுத் தெரிந்துக் கொண்ட கருடன் அவர் சொன்ன மலை மீது சென்று அக்கிளையை விட்டார். மிக பயங்கரமான சத்தத்துடன் விழுந்த அந்த கிளையால் மலையின் சிகரம் போன்றவை பெரும் சேதத்திற்குள்ளாயின. அதன் பின் ஒரு சிகரத்தின் மீதமர்ந்து ஆமை, யானை இரண்டையும் உண்டார். ஆகாரம் முடிந்ததும் ஆனந்தமாய் பறக்கலானார்.

கருடன் இங்கிருந்து பறந்து செல்லத்துவங்கியதும் தேவலோகத்தில் சில சகுனத்தடைகள் ஏற்பட்டன. இந்திரனின் வஜ்ராயுதம் பயத்தால் பற்றி எரிந்தது. பகலிலேயே புகை மண்டலத்துடன் வால் நக்ஷத்திரம் விழத் துவங்கின. தேவாசுர ஆயுதங்கள் மிகுந்த தொல்லையளித்தன.

மேகமின்றி வானத்தில் இடியோசை கேட்டன. புழுதியலையால் தேவர்களின் கிரீடங்கள் மாசடைந்தன.. இதையெல்லாம் கண்ட இந்திரன் பிருஹஸ்பதியிடம் “குருதேவா எதனால் இந்த துர்நிமித்தங்கள் தோன்றுகின்றனர். எதிரிகள் யாருமில்லை என்றிருக்கும் இச்சமயத்தில் இவைத் தோன்றக் காரணம் என்ன?” என்று கேட்டு நின்றான். பிருஹஸ்பதி “இந்திரா ! கச்யபருக்கும் விநதாவிற்கும் தோன்றிய மகன் கருடன் அமுதத்தைப் பெற்றுச் செல்ல இங்கு வந்துக் கொண்டிருக்கிறான். இது உன் தவறாலும், பாலகில்ய மகரிஷிகளின் தவபலத்தாலுமே நடந்தது. கருடன் மிக பலசாலி. அவர் தன் விருப்பம் போல் தன் செயலை செய்து முடிக்கும் திறன் படைத்தவர். அமுதத்தைப் பெறும் வல்லமைப் பெற்றவர்” என்று கூறியதும் பிருஹஸ்பதியே சொல்லிவிட்டார் என்பதால் அமுதத்தை பாது காக்கும் காவலர்களுக்கு எச்சரிக்கை விடப்பட்டது.



பலவிதமான ஆயுதங்களைக் கொண்டு அனைவரும் போருக்குத் தயார் ஆவது போல் கத்தி, வாள், வில், வேல் கவசம், கேடயம் தாங்கி நின்றனர். இந்திரனும் தன் வஜ்ராயுதத்துடன் வந்து நின்றான்.

சூதர் மேலும் சொல்ல முற்பட்ட போது, சௌனகர் “சூதரே ! இந்திரன் என்ன தவறு செய்தான்? கருடன் பாலகில்யரின் தபோ பலத்தால் எப்படி பிறந்தான்? என்பதை சொல்லவும்” என கேட்ட படியால் “நீங்கள் கேட்டது புராண விஷயம்தான். மிகச் சுருக்கமாக எடுத்துக் கூறுகிறேன்”. என கூறத் துவங்கினார்.

கச்யபர் மகனை வேண்டி யாகம் செய்தார். அதில் உதவிப் புரிய தேவர், கந்தர்வர், ரிஷிகள் என அனைவரும் அதில் பங்குக் கொள்ள வந்தனர். ஒவ்வொருவருக்கும் ஒரு பணித் தரப்பட்டது. சமித்துக் கொண்டு வரும் பணி இந்திரனுக்கும், பாலகில்ய மகரிஷிகளுக்கும் தரப்பட்டது. இந்திரன் பலசாலி என்பதால் அவன் மலையளவு சமித்தினைக் கொண்டு வந்தான்.வரும் வழியில் பாலகில்யர் உருவில் மிகச் சிறியவர்கள். ஒரு துளி நீரை கடப்பதே அவர்களுக்கு மாபெரும் செயல் என்பதால் ஒரே ஒரு புரசு கிளையை மொத்தப் பேரும் சேர்த்து தூக்கி வந்தனர். அதைக் கண்ட இந்திரன் கர்வ பலத்தால் அவர்களை ஏளனமாகப் பார்த்து விட்டு, கேலி செய்தபடியே அவர்களை அவமானப்படுத்தும்படி தாண்டி வந்தான். முனிவர்களுக்கு மிகுந்த கோபம் உண்டானது. அதனால் தாங்கள் அன்றாடம் வழிபடும் அக்னி முன் தங்களின் விரத பலத்தால் மந்திரங்களின் மூலம் ஆஹூதி அளித்தனர்.

“தேவர்களுக்கு மற்றொரு இந்திரன் உண்டாகட்டும். இப்போதுள்ள இந்திரனுக்கு 100 மடங்கு சிறந்தவனாக, இவனுக்கு பயம் தருபவனாக, தன் எண்ணப்படி எங்கும் செல்லும் சக்தியுள்ளவனாக, தன் விருப்பப் படி வீரத்தை காட்டுபவனாக, வேகம் மிகுந்தவனாக இருக்கட்டும்”. என்று சங்கல்பித்தனர். இவர்களது சங்கல்பத்தால் நடுங்கிப் போன இந்திரன் கச்யபரிடம் முறையிட்டதும், அவர் மகரிஷிகளிடம் “தாங்கள் அனைவரும் இந்திரன் செய்த தவற்றை மன்னித்து, அவனுக்கு அருள் புரியுங்கள். பிரம்மா ஆணையிட்டபடியே இந்த இந்திரன் இருக்கிறான். வேறொரு இந்திரன் என்றால் பிரம்மாவின் வாக்கு பொய்யாகிவிடும். எனவே மாற்றாக உங்களின் சங்கல்ப பலத்தால் தோன்றும் மகன் பக்ஷிகளுக்கு இந்திரனாகட்டும் என இந்திரன் யாசிக்கிறான் வழி சொல்லுங்கள்.” என்றதும்.

அவர்கள் “பிரஜாபதியே ! நீ குழந்தை வேண்டி யாகம் செய்கிறாய். நாங்கள் இந்திரன் வேண்டி இந்த அனுஷ்டானத்தை செய்தோம். உன் பொருட்டு நாங்கள் அதை ஏற்கிறோம். நன்மை எதுவோ அதை நீயே செய்து விடு” என்று அனுமதித்து ஆசிக் கூறிச் சென்றனர்.

அதே சமயத்தில்...

அடுத்த இதழில்....

- **Thali**, Ph:09786223577



# அஷ்டவராகிகளை வழிபட்டால் கிடைக்கும் அற்புத பலன்கள்

மனிதர்களாகிய நாம் செய்யும் செயல்களை எட்டு வகைகளுக்குள் அடக்கிவிடலாம்; இந்த எட்டு செயல்களை மையமாகக் கொண்டே மாந்திரீகம் உருவானது; மாந்திரீகத்திற்கு அஷ்டகர்மா என்று பெயர்; இந்த அஷ்டகர்மாக்களை இயக்குவது அஷ்ட பைரவப் பெருமான்களே!

இந்த எட்டு செயல்களைக் கொண்டு 64 விதமான பாவச் செயல்களைச் செய்ய முடியும்; அதனால், அஷ்ட பைரவர்கள் ஒவ்வொருவரும் அஷ்டாஷ்ட வடிவங்கள் எடுத்து 64 பேர்களாக தோன்றினர்; இந்த 64 பைரவர்களுக்கும் 64 தெய்வீக பெண் சக்திகள் துணை புரிகின்றனர்; இந்த 64 பைரவ தம்பதிகளில் முதன்மையானவர் உன்மத்த பைரவர்; இவரது துணையே வராகி!

வராகியின் வடிவங்களும் 64 ஆக இருக்கின்றன; இந்த 64 வடிவங்களில் முதன்மையானவர்கள் எட்டு வராகிகளே! அஷ்டவராகிகளைப் பற்றி இப்போது பார்க்கலாம்.

## பஞ்சமீ

அன்னை அராசாலை என்ற வராகியைப் பற்றி வராகி கல்பம் என்ற நூல் விரிவாக எடுத்துரைக்கிறது; ஆனி மாதம் வளர்பிறை பஞ்சமீ திதியன்று அன்னை ராஜராஜேஸ்வரியிடம் இருந்து தோன்றியவள் அன்னை வராகி; பஞ்ச கிருத்தியங்களான சிருஷ்டி, ஸ்திதி, சம்காரம், திரோதானம், அனுக்கிரகம் என்னும் ஐந்து கிருத்தியங்களில் ஐந்தாவதாக இருக்கும் அனுக்கிரகம் என்ற ஆத்மவித்யையை அருளும் ஆருண்ய ரூபமே பஞ்சமீ ஆகும்; சதாசிவனின் அனுக்கிரக சக்தியே மகாவராகி தத்துவம் ஆகும்; இதனால் தான் இவளுக்கு பஞ்சமீ என்ற பெயர் உண்டானது; பஞ்சமீயை இரவு நேரம் வழிபடுவதே சிறப்பு; இரவு 11 மணி வரை வழிபட வேண்டும்;

வராகி என்ற வாராகி

சைவம், வைஷ்ணவம், சாக்தம் இம்மூன்று சமயங்களிலும் சிறப்பான இடத்தில் மக்களால் வழிபடப்படுவது வராகியைத்தான்! பரமரகசியமான இந்த வழிபாட்டுமுறையால் தான் இந்த பாரத தேசத்துடன் மோதவே மற்ற நாட்டினர் பயந்தனர்; இடையில் வந்த புறசமய தாக்குதல்களால் இந்த வராகி வழிபாடு அருகிவிட்டது; இப்போது மீண்டும் அன்னை வராகியின் அருள்பார்வை நமது தேசத்தின் மீது விழுந்திருக்கிறது; மஞ்சள் பட்டாடை அணிவதை விரும்புபவள்; மோளமுகம் கொண்டவள்; இவளது திருப்பாதத்தில் நூபுரம் விளங்கும்; நான்கு திருக்கரங்களைக் கொண்டவள்; சைவ சமய வாராகியின் திருக்கரங்களில் கலப்பை, முசலம், வரதம், அபயம் விளங்கும்; கருநிறத்திருமேனியைக் கொண்டவள்;

படைப்பின் ஆரம்பத்தில் நீரில் மூழ்கிய பூமியை வராக உருவம் ஏற்று மேலே கொண்டு வந்து பூமியைக் காத்த ஸ்ரீவராக மூர்த்தியின் உருவத்தை ஏற்று எதிரிகளைப் பொடியாக்கியவள்;

ஸ்ரீவராகி சக்தி வாய்ந்தவள்; ஒரு முகம், இருகண்கள், நான்கு திருக்கரங்களைக் கொண்டவள்; கருநீல நிற ஆடையை விரும்பி அணிபவள்; கைகளில் கலப்பை, உலக்கை போன்ற ஆயுதங்களைத் தரித்திருப்பாள்; மற்ற இருகரங்களில் அபய வரத முத்திரைகளைக் கொண்டிருப்பாள்; இவளின் தலையலங்காரம் கிரீட மகுடம் போன்று இருக்கும்; வராகச் சக்கரத்தின் மீது அமர்ந்து எழுந்தருளுவாள்; சிம்மவாகனத்திலும் வீற்றிருப்பாள்; ஸ்ரீவராகி எலும்பின் தேவதை; இவள் கோபம் கொண்டால் நாட்டில் வாத, பித்த நோய்கள் அதிகமாகும்;

மயில் தோகையைக் கொண்டு ஸ்ரீவராகிக்கு விசிறி வேண்டிக் கொண்டு வெள்ளரிக்காயும், முறுக்கும் நைவேத்தியம் செய்ய வேண்டும்; அதன் பின் நைவேத்தியத்தை பக்தர்களுக்கு விநியோகிக்க வேண்டும்; இவ்வாறு இவளை வேண்டினால் வளம் பல தருவாள்;

பக்தர்கள் வேண்டுவது எதுவாக இருந்தாலும் அள்ளித் தருவதில் வள்ளல்களின் தலைமைக் கடவுளாகவே திகழுகிறாள்; இவளது பக்தர்கள் பணத்திற்கு அடிமையாக மாட்டார்கள்; பொன், பொருள் காட்டி இவர்களை ஏமாற்றிட முடியாது; ஆனால், அன்புக்கு பணியக்கூடியவர்கள்; இவளது அடியவர்கள் மிகுந்த மகிழ்ச்சியுடனேயே விளங்குவர்; துன்பம் இவர்கள் இருக்கும் திசையில் கூட எட்டிப்பார்க்காது; மனநோயாளிகள் கூட இவர்கள் இருக்கும் பக்கம் வரமாட்டார்கள்; வராகி பக்தர்களுடன் அன்புடன்(நயவஞ்சகமின்றி) பழகுபவர்களுக்கு மனத் தெளிவும், வீட்டில் மகிழ்ச்சியும் ஏற்படும்;

## ப்ரத்யட்ச வாராகி

கண்முன்னே தோன்றி அருள்புரிபவள் என்பதற்கு சம்ஸ்க்ருதத்தில் ப்ரத்யட்ச வாராகி என்று அர்த்தம்; சில இடங்களில் இந்த அன்னை அருளாட்சி புரிந்துவருகிறாள்; யாராவது உங்கள் ஊரில் இந்த அன்னை இருந்தால் தெரிவிக்கவும்;தன் பக்தர்களின் மனக்குறையை உடனே போக்கும் அருட்குணம் உடையவள்; எல்லாவிதத் தடைகளையும் தகர்த்து நல்வழி காட்டுபவள்; இவளது சன்னதியில் தேங்காயில் நெய்விட்டு தீபம் ஏற்றுவது நல்லது; பஞ்மி திதியன்று இவளுக்கு புது ஆடைகளை அணிவித்து, புது மலர்மாலைகள் அணிவித்து அர்ச்சனை செய்தால் நமது நியாயமான கோரிக்கைகள் நிறைவேறும்; யாருக்கும் தீங்கு நினைக்காமல் இருப்பவர்கள் மட்டுமே இந்த அன்னையை தினமும் வழிபட முடியும்; அப்படி வழிபடுவது போல நடிப்பவர்களுக்கு இவளின் அருள் சிறிதும் கிட்டாது;

## தண்டினி வாராகி

ஸ்ரீவாராகிதேவி ஒரு திருக்கரத்தில் தண்டு ஏந்தி காட்சி தந்ததால் இவளை தண்டினி என்று அழைப்பது வழக்கம்;

## அஸ்வாரூட வாராகி

இவள் அம்பிகையின் குதிரைப்படைத் தலைவியாவாள்; இவள் தனது திருக்கரங்களில் பாசம், அங்குசம், பிரம்பு ஆகியவைகளை ஏந்தி மிகவும் கம்பீரமாகக் குதிரை மீது அமர்ந்திருப்பாள்; இவளது குதிரையின் பெயர் அபராஜிதா ஆகும்; இவளை வணங்கினால் மன அடக்கம், இந்திரிய அடக்கம் உருவாகும்; ஆன்மீகத்தில் முன்னேற முதல் படியாக இருப்பது காம இச்சையே! இதைக் கடக்கவே பல பிறவிகள் எடுக்க வேண்டும்; இரண்டாவது தடையாக இருப்பது நான் என்ற அகங்காரம்; புராணங்கள், கடவுள்களின் வரலாறு படித்தால் நெடுக அகங்காரத்தால் தான் பலர் சாபம் பெற்றிருப்பர்; அல்லது முறை தவறிய காம இச்சையால் சாபம் பெற்றிருப்பர்; நாம் தான் கர்ம உலகமாகிய பூமியில் வசிக்கிறோம் இல்லையா? இவளை வணங்கி, பிறப்பற்ற முக்தியைப் தந்தருள்வாள்.

## சம்பத்கரி வாராகி

இவள் அம்பிகையின் யானைப்படையின் தலைவி! இவள் அங்குசத்தின் அதிஷ்டான தேவதை ஆவாள்; இந்த அங்குசத்தைத் தியானிப்பவர்கள் எதிரிகளை அடக்கும்



வல்லமையைப் பெறுவார்கள்;

வாழ்க்கையில் மங்களமான இடத்தைப் பெற இவளை வழிபட வேண்டும்; இவளை வழிபட்டால் வெற்றி மேல் வெற்றி பெற்று உயர்ந்த நிலையை அடையலாம்;

### தண்டினி வாராகி

அம்பிகையின் நால்வகைப் படைகளுக்கும் படைத்தலைவியாக இவள் விளங்குகிறாள்;இவள் ஆஷாட என்னும் ஆடி மாத நவராத்திரியில் வழிபடப்படுகிறாள்; தன் பக்தர்களின் எதிரிகளைத் தண்டித்து அடக்கும் சக்தி கொண்டவள்; எனவே தண்டினி எனப் பெயர் பெற்றவள்; இவள் எதிரிகளைத் தண்டிக்க பயன்படுத்தும் கருவியே தண்டம் ஆகும்; இவளுக்கு இன்னொரு பெயர் வார்த்தாளி!

### சொப்பன வாராகி

கரிய நீல வண்ணத்திருமேனி உடையவள்; மூன்று கண்களும், பன்றி முகமும் கொண்ட கன்னித்தாய்; சந்திரனைத் தலையில் சூடியிருப்பாள்; அழகிய குதிரை மீது அமர்ந்து பவனி வருவாள்; பிரபஞ்சம் எங்கும்! நல்ல அழகும், அருளும், வெற்றியும் உடைய இந்த சிறப்பான பெண் தெய்வத்தை அளவற்ற புண்ணியம் செய்தவர்கள் மட்டுமே வணங்கிட முடியும்; சொப்பன வாராகி வழிபாட்டுமுறை மிகுந்த பாதுகாப்பானது; ஸ்ரீசொப்பன வாராகி நேரில் வரமாட்டாள்; நம் சொப்பனத்தில் வந்து நம் சந்தேகங்களுக்குப் பதில் கூறுவாள்; எத்தனை முறை அழைத்தாலும் சலிக்காமல் வந்து பதிலளிப்பதில் இவளது தாய்மையை உணரலாம்.





# ஏவல், பில்லி, சூனியம் நீக்கும் எளிய பரிகார முறை!

செய்வினை நீக்கும் எளிய பரிகாரமுறை

இக்காலத்தில் பொறாமை, வஞ்சனை கொண்ட மனிதர்கள் தமது எதிரிகளை நேரடியாக எதிர்க்க துணிவில்லாமல் மறைமுகமாக தாக்கி அழிக்கவே ஏவல், பில்லி, சூனியம் மற்றும் செய்வினை இவற்றை செய்கின்றனர்.

இப்படிப்பட்ட செய்வினை, ஏவல், பில்லி, சூனியம், கண்திருஷ்டி மற்றும் பிற தீயசக்திகளும் எதிர்மறை சக்திகளும் அழிந்தோட ஒரு எளிய முறை உண்டு.

இதோ அதன் செய்முறை!

பொருட்கள் அளவு:

1. வெண்கடுகு 250 கிராம்
2. நாய்க்கடுகு 250 கிராம்
3. மருதாணி விதை 250 கிராம்
4. சாம்பிராணி 250 கிராம்
5. அருகம்புல் பொடி 50 கிராம்
6. வில்வ இலை பொடி 50 கிராம்
7. வேப்ப இலை பொடி 50 கிராம்

இவை அனைத்தும் நாட்டு மருந்து கடைகளில் வெகு எளிதாக கிடைக்கக்கூடியவை.



சாம்பிராணியை மட்டும் பொடி செய்து கொண்டு மீதமுள்ள 6 பொருட்களுடன் சேர்த்து ஒரு கலனில் அடைக்கவும்.

இவ்வாறு தயாரிக்கப்பட்ட பொருட்களின் கலவையை செவ்வாய், வியாழன் மற்றும் ஞாயிறு கிழமைகளில் அடுப்புக்கரி நெருப்பில் தூவி தூபம் போடவும். தினமும் செய்தால் தவறில்லை. 48 நாட்களுக்குள் நிச்சயம் பலனுண்டாகும். ஏவல், பில்லி, சூனியம், செய்வினை, எதிர்மறை மற்றும் தீய சக்திகள் அனைத்தும் நிச்சயம் நீங்கும்.

குடும்பத்தில் அமைதி உண்டாகும். குடும்பத்தின் உறுப்பினர்களிடையே ஒற்றுமை உண்டாகும்.

லட்சுமி கடாட்சம் உண்டாகும். மேற்கண்ட கலவையை நெருப்பில் தூவும் போது கீழே சிந்தாமல் கவனித்துக் கொள்ளவும்.

ஏனெனில் மேற்கண்ட 7 பொருட்களும் தெய்வத்தன்மை பொருந்தியவை. யார் காலிலும் படக்கூடாது.

மேற்கண்ட முறையை பயன்படுத்தி மாந்திரீக கோளாறுகளிலிருந்து பாதிக்கப்பட்ட குடும்பங்களை காப்பாற்ற எல்லாம் வல்ல இறைவன் அருள் துணை நிற்கும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

ஆன்மிக மலர் மெயில் புத்தகத்தினை மற்றவர்கள் அறிந்து கொள்ள நீங்களும் உதவுங்கள். உங்கள் இல்லங்களின் அருகில் நடைபெறு கோவில் திருவிழாக்களில், நமது இலவச இதழ்பற்றிய துண்டு பிரசுரங்கள், சிறிய அளவிலான பேனர் போன்றவற்றை விநியோகித்து எங்கள் சேவைக்கு உதவுங்கள், பேனர், துண்டு பிரசுரங்களை நாங்களே இலவசமாக தயாரித்து உங்கள் முகவரிக்கு அனுப்பிவைக்கிறோம். விருப்பமுள்ள அன்பர்கள் 08825844033 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளவும்.

நமது இதழ் வளர்ச்சிக்கு உதவுங்கள்....

இந்து சமய ஆன்மிக கருத்துக்களை பரப்பும் எளிமையான நோக்கத்துடன், பல்வேறு ஆன்மிக செய்திகளை தாங்கி, தற்போதைய தொழில் நுட்பத்தில் மிக அழகாக நேர்த்தியாக வடிவமைக்கப்பட்டு, இலவசமாக வெளிவரும் நமது இதழைப் பற்றி இன்னும் அதிகமான அன்பர்களுக்கு தெரியப்படுத்த...

நமது இதழ்பற்றி விளம்பரம் செய்ய பல்வேறு முயற்சிகளை எடுத்து வருகிறோம். அதிகமாக அன்பர்கள் பயன்பெற எங்களின் முயற்சிக்கு உங்களால் ஆன சிறு தொகையை அளித்து நமது இதழை விளம்பரப்படுத்த உதவுங்கள். சிறிய தொகையானாலும் எங்கள் சேவைக்கு அவசியம் தேவை.....

செக், டி.டி., ஆன்லைன் மூலமாகவும் அனுப்பிவைக்கலாம்,

தொகை அனுப்பவேண்டிய முகவரி

AANMEEGA MALAR TRUST

நெ.16/18, பாரதீஸ்வரர் காலனி, 4வது தெரு, கோடம்பாக்கம், சென்னை 600024

AANMEEGA MALAR TRUST (ACCOUNT NO. 310601011001269)

IFSC CODE:VIJB0003106 MICR CODE: 600029043

VIJAYA BANK (KODAMBAKKAM BRANCH)



# திருமலை திருப்பதி ஸ்ரீ கோவிந்தராஜஸ்வாமி பிரம்மோத்ஸவம்





**திருமலை திருப்பதி ஸ்ரீகோவிந்தராஜ ஸ்வாமி பிரம்மோத்ஸவம்**

**2018 மே 21 முதல் 29 வரை**

21.05.2018 திங்கட்கிழமை,
பகல்: துவஜாரோஹணம்,
இரவு: பெரிய சேஷ வாகனம்

22.05.2018 செவ்வாய்க்கிழமை,
பகல்: சிறிய சேஷ வாகனம்,
இரவு: ஹம்ஸ வாகனம்

23.05.2018 புதன்கிழமை,
பகல்: சிம்ஹ வாகனம்
இரவு: முத்துப்பந்தல் வாகனம்

24.05.2018 வியாழக்கிழமை
பகல்: கல்பவிருஷ வாகனம்
இரவு: சர்வபூபால வாகனம்

25.05.2018 வெள்ளிகிழமை
பகல்: மோஹினி அவதாரம்
இரவு: கருட வாகனம்

26.05.2018 சனிக்கிழமை
பகல்: ஹனுமத்வாகனம்
இரவு: யானை வாகனம்

27.05.2018 ஞாயிற்றுக்கிழமை
பகல்: சூரியப்பிரபை வாகனம்
இரவு: சந்திரப்பிரபை வாகனம்

28.05.2018 திங்கட்கிழமை
பகல்: திருத்தேர்
இரவு: துவஜாவரோஹணம்



அழகிய வடிவமைப்பில்
வார இதழ்கள்,
மாத இதழ்கள்,
பப்ளிகேஷன்ஸ்
புக் ஓர்க்,
அட்டைப்பட
வடிவமைப்பு,
நாளிதழ்கள்,
போன்றவை
தரமாகவும்
குறைந்த செலவில்
செய்துதரப்படும்
Bhaanrajg Graphics
செல்: +91-8825844033

# சித்தர்கள் யார்?



சித்தர்களை பற்றி நமது மனதிற்குள் கட்டி வைத்திருக்கின்ற கற்பனை கோட்டை சித்தர்களை நாடினால் பெறமுடியாத பெரும் பேறுகளை எல்லாம் பெற்றுவிடலாம் என்ற அசைக்க முடியாத நம்பிக்கை. இவை மட்டுமல்ல சித்தர்கள் ஆகாய வழியாக பறந்து செல்வார்கள். அலைகளே வீசாத நடுக்கடலில் நடந்து போவார்கள். சுற்றி சுழன்றடிக்கும் சூறாவளி காற்றை கைப்பிடிக்குள் அடக்கி விடுவார்கள், ஆக்ரோஷமாக ஆகாயத்திற்கும் பூமிக்கும் எழுந்து நின்று ஆர்ப்பாட்டமாக பற்றி எரியும் நெருப்பை கூட வாயினால் ஊதி அனைத்து விடுவார்கள், என்று எத்தனையோ எதிர்பார்ப்புகளை அவர்கள் மீது வைத்திருக்கிறோம்.

நேற்றுவரை எப்படியோ எனக்கு தெரியாது பறந்து செல்லுகிற சித்தர் ஒருவரின் படத்தை தனியார் தொலைக்காட்சி ஒன்று ஒளிபரப்பிய பிறகு தமிழ்நாட்டில் சாதாரண ஜனங்களுக்கு கூட சித்தர்களின் மீது ஒருவித ஈர்ப்பு ஏற்பட்டிருக்கிறது. பாமரர்களும் நம்புகிறார்கள். படித்தவர்களும் தேடுகிறார்கள் என்ற நிலை வந்தவுடன் வர்த்தகமும் கூடவே வந்துவிடும் என்பது போல நான் தான் சித்தர், நானே தான் சித்தர் என்று விளம்பர பலகையை நெஞ்சில் தொங்க விட்டுக்கொண்டு தமிழ் நாட்டின் தெரு முனைகளில் கூட கூட்டம் போட ஆரம்பித்து விட்டார்கள்.

இந்த நிலையில் தான் சித்தர்களை பற்றி அவர்களது சித்தாந்தங்களை பற்றி அவர்களின் வாழ்க்கை முறைகளை பற்றி முழுமையாக அறிந்து கொள்ள வேண்டும் அறிந்ததை மற்றவர்களோடு பகிர்ந்து கொள்ள வேண்டும் என்ற எண்ணம் எனக்குள் வேர்விட ஆரம்பித்தது அதனால் தான் பலநூறு பேர்கள் சித்தர்களை பற்றிய விளக்கங்களை கொடுத்து கொண்டிருந்தாலும் எனது பார்வையில் எனது அனுபவத்தில் கண்ட சித்தர்களை உங்களோடு பகிர்ந்து கொள்ள போகிறேன்.



சித்தர்களின் மார்க்கங்களை அறிந்து கொள்வதற்கு முன்பு சித்தர்கள் என்றால் யார்? என்பதை அறிந்து கொள்வது மிகவும் முக்கியமாகும். ஒன்றிரெண்டு கவிதை எழுதி அதை முட்டு சந்திலும் குட்டி சுவர் ஓரத்திலும் பாடி பரவசப்பட்டு சில தேனீருக்கு விலை போகும் தேவாங்குகளிடம் பாராட்டும் கைதட்டலும் பெற்று நானே மிக சிறந்த கவியரசன் ஆணை அம்பாரியில் பவனி வரவேண்டியது எனது கவிதைகளே என்று மார்தட்டுபவர்கள் மத்தியில் பலநூறு கவிதை எழுதி பல காவியங்களை படைத்து ஆன்றோரும் சான்றோரும் அறிவு சார்ந்த பெரியோரும் ஆகா இதுவல்லவோ கவிதை என்று பாராட்டினாலும் கூட தன்னை கவிஞன் என்று பறை சாற்றுவதில் நாணம் மிக்க நல்லவர்களும் இருக்கிறார்கள்.

சித்தர்கள் கதையும் இப்படித்தான் கல்லூரி புத்தகத்தை ஒன்றிரெண்டு முறை புரட்டி விட்டு நான் மருத்துவனாகி விட்டேன் என்று அறுவைசிகிச்சை செய்ய போகும் பித்துக்குளி மருத்துவனை போல் பலர் அலைகிறார்கள் தன்னை சித்தர்கள் என்று பறை சாற்றி கொண்டு ஆனால் உண்மை சித்தர்கள் அரங்கத்திற்கு வருவது இல்லை ஆர்ப்பாட்ட கூட்டத்தாரோடு கலந்து கொள்வதில்லை அதனால் அவர்களை இன்னாரென்று அடையாளம் தெரிந்து கொள்ள முடியாமல் போலிகளையும் பொய் புரட்டுகளையும் உண்மை என்று நம்பி ஏமாந்து போகும் சோணகிரிகள் மலிந்துவிட்ட நிலையில் பொய்க்கும் மெய்க்கும் உள்ள வித்தியாசத்தை உறுதிப்படுத்தி காட்ட வேண்டிய கடமை நமக்கு உண்டு. சித்தர்கள் யார் என்ற கேள்விக்கு சரியான விடை கிடைத்தால் தான் போலிகளை அடையாளம் காணலாம்.

சித்தர்களை பற்றி இது வரை நிலவி வருகின்ற கருத்துக்களையும், நம்பிக்கைகளையும் பார்க்கும் போது சித்தர்கள் என்று அறியபடுபவர்களின் செயல்முறைகளை நடவடிக்கைகளை ஆராய்கிற போதும் சித்தர் யார்? என்ற கேள்விக்கு விடை காணுவது மிகவும் கடினம்.

சித்தர் என்ற சொல்லுக்கு பொது வரையறை தேடி இதுதான் அதன் இ ல க் க ண ம் என்று அறுதியிட்டு கூ று வ து ம் அ தை விட கடினம் என்பதும் தெளிவான உண்மை யாகும். ஒரு பொருளை பற்றிய சந்தேகம் உருவாகும் போது அதன் முடிச்சுகளை விடுவித்து உண்மையை உள்ளபடி காட்டுவதற்கு அந்த பொருள் தெளிவாக இருக்க வேண்டும். அப்போது தான் நல்ல பதிலை அடையலாம் ஆனால் இங்கு சந்தேகத்தை உற்பத்தி செய்கின்ற பொருளே இது தான் அந்த பொருளா? என்ற அடிப்படை சந்தேகத்தையே கிளப்பி விடுகிறது என்றால் விடை காணுவது எங்கனம்.

சித்தர்கள் என்றால் மனைவி மக்கள், சொந்தம்பந்தம் தொழில் சமுதாய அந்தஸ்து அத்தனையையும் துறந்தவர்கள் அவைகளை உடம்பில் ஒட்டி கொண்டிருக்கும் தூசுகளை போல் தள்ளி விட்டவர்கள் என்று ஒருசாராரும் இப்படி கூறுவது கூட சரிவராது. சாதம் வடித்து குழம்பு சேர்த்து கூட்டு பொறியலோடு உண்ணுவது உலகத்தாரின் நடைமுறை என்றால் சித்தர்களோ சாக்கடையில் கிடப்பதையும் தேவாமிர்தமாக உண்பவர்கள். உலக நடப்பிற்கு மாறானவர்கள், மாறுபட்டவர்கள் என்று வேறொரு சாரார் கூறுகிறார்கள் இவர்கள்

இருவரும் கூறுவதுமே தவறு சாதாரண மனிதனது செயல்களை செய்யாமல் அசாதாரணமான சித்து விளையாட்டுகளை செய்பவர்களே அவர்கள் என்று இன்னொரு சாரார் கூறுகிறார்கள்.

சாக்கடையில் கிடப்பதும் ஆகாயத்தில் பறப்பதும் ஒரு மனிதனை உயர்ந்தவனாக பிறப்பற்ற உத்தமனானாக உருவாக்கி விடுமா? வித்தைகள் செய்வதும் வித்தைகள் கற்பதும் மீண்டும் மீண்டும் இந்த பூமியில் வந்து பிறக்கின்ற தண்டனையே கொடுக்கும் எனவே சித்தர்கள் அதை செய்ய மாட்டார்கள் சித்தத்தை அதாவது தனது மனதை முழுமையாக சிவனிடம் வைத்தவர்கள் என்று விளக்கம் தருகிறார்கள் சில பக்தர்கள்.

சித்தத்தை சிவன்பால் வைப்பவர்கள் அல்ல சித்தர்கள் காரணம் சிவம் என்பதே ஒரு மாயத் தோற்றம் இந்த உலகத்தை பிடித்து கொள்ள இருக்கும் கடைசிக் கயிறு அந்த சிவனை நினைப்பதை விட எந்த நினைவும் இல்லாமல் இருப்பதே சித்தர்களின் வேலை எனவே சித்தத்தை அடக்கியவர்கள் சித்தர்கள் என்று சில ஜீவன் முக்தர்கள் கருதுகிறார்கள்.

புராணங்களிலும், இதிகாசங்களிலும் கரைகண்ட வைதீக ஞானிகள் சிலர் சித்து என்ற வார்த்தை மூன்று என்ற பொருளை தரும் சிவபெருமான் முக்கண்ணன் என்பது எல்லோருக்கும் தெரியும் எனவே சிவனின் அம்சமாக இருப்பவன் சித்தன் அவனது செயல் சித்து என்கிறார்கள். சித்தர்கள் சிவனுக்கு மட்டுமா சொந்தக்காரர்கள்? பார்போற்றும் வைஷ்ணவத்திற்கும் சித்தர்களுக்கும் தொடர்பில்லையா? என்று சிலர் கேட்டதனால் அதற்கும் பதில் தருகிறார்கள். பெரியவர்கள் ஓங்கி உலகளந்த உத்தமனான திருவிக்கிரம பெருமான் இந்த அவதாரம் எடுப்பதற்கு முன்பு மூன்றடி உயரம் கொண்ட வாமனனாக வந்தான் அவன் மாவலி சக்ரவர்த்தியிடம் மூன்றடி மண் கேட்டான் எனவே மூன்று என்பது பெருமாளையே குறிக்கும் எனவே சித்தர்கள் என்பவர்கள் திருமாலின் அடியார்களே என்றும் கூறுகிறார்கள்.

நாமோ நாலும் கற்ற பண்டிதரும் அல்ல. முற்றும் துறந்த முனிவர்களும் அல்ல. பசி வந்தால் உண்டு உடல் சோர்ந்தால் உறங்கி எழும்பும் சாதாரண ஜீவன்கள் அன்றாடம் வயிற்றுக்கும் வாய்க்கும் போராட்டம் நடத்தும் அற்ப மனிதர்கள் நமக்கு இந்த தத்துவ விளக்கங்கள் எதுவும் புரிவது இல்லை புரியவேண்டிய அவசியமும் இல்லை சித்தர் என்றால் யாரென்று மிக எளிமையான ஒரு முடிவிற்கு நாம் வந்து விடலாம். மனிதர்களாக இருந்தாலும் தெய்வங்களால் மட்டுமே செய்ய கூடிய செயல்களை செய்பவர்கள் சித்தர்கள் என்று முடிவு செய்து கொள்ளலாம். இன்னொரு முடிவிற்கு கூட வரலாம். கடவுளை காண்பதற்காக ஏங்கி கொண்டிருப்பவன் பக்தன் கடவுளை பார்த்து சாந்தி பெற்றவன் சித்தன்.

> “ வித்தைகள் செய்வதும் வித்தைகள் கற்பதும் மீண்டும் மீண்டும் இந்த பூமியில் வந்து பிறக்கின்ற தண்டனையே கொடுக்கும் எனவே சித்தர்கள் அதை செய்ய மாட்டார்கள், மனிதர்களாக இருந்தாலும் தெய்வங்களால் மட்டுமே செய்ய கூடிய செயல்களை செய்பவர்கள் சித்தர்கள் என்று முடிவு செய்து கொள்ளலாம். ”

யோகி ஸ்ரீ ராமானந்த குரு

மேலும் தொடர்பு கொள்ளவும்

போன்: 9442426434





# மலேசியா வருகிறார் குருஜி



மலேசி நாட்டின் நலம் வேண்டியும் மலேசிய மக்களின் வளம் வேண்டியும் “இல்லந்தோரும் எம்பெருமான் நாராயணன் “ என்ற தெய்வீக திட்டத்தை துவக்கியுள்ளர் சனாதன தர்மத்தின் தொண்டரும் இறைவன் நாராயணனின் திருவடியை தியானிப்பவருமாகிய “யோகி ஸ்ரீ ராமானந்த குரு”

தங்களின் சகல கஷ்டங்களும் விலக வேண்டும் இன்னல்கள் மறைந்து இனியவைகள் உதயமாக வேண்டும் பாவமும் சாபமும் மறைந்து புதிய வாழ்க்கை வாழ வேண்டும் என்று விரும்புகிற மலேசிய குடும்பத்தார் இந்த தெய்வீக நிழ்வில் கலந்து கொள்ளலாம்

பகவான் ஸ்ரீ நாராயணனின் பரிபூரண அருளை பெற்ற குருஜி அவர்களின் சத்சங்கத்தையும் ஆசிர்வாதத்தையும் நேரடியாக அனைவரும் பெறலாம்

மக்கள் அனைவரும் ஸ்ரீமத் நாராயணனின் அருளை பெற வேண்டும் என்பது மட்டுமே குருஜியின் நோக்கம் எனவே அன்பளிப்புகள் காணிக்கைகள் என்று எதுவுமே அவசியம் இல்லை அனைவருக்கும்

**முற்றிலும் இலவச அனுமதி**

**இடம்:**

Sri Subramaniar Swamy Temple,
Batu Caves, Selangor

**நாள் 10.6.2018 நேரம்: 5 pm to 9 pm**

**மேலும் விபரங்களுக்கு**

**மலேசியா தொலைபேசி எண்: 0173752195**

# சிங்கம், கொக்கு, கழுதை, கோழி, காக்கை, நாயிடம் மனிதன் கற்கவேண்டியவை முன்னோர் கூறிய உண்மை













சிங்கத்திடம் இருந்து ஒன்றையும், கொக்கிடம் இருந்து இரண்டையும், கழுதையிடம் இருந்து மூன்றையும், கோழியிடம் இருந்து நான்கையும், காக்கையிடம் இருந்து ஐந்தையும், நாயிடம் இருந்து ஆறு விஷயங்களையும் நாம் கற்று கொள்ள வேண்டும். என முன்னோர்கள் கூறியுள்ளனர்.

சிங்கம் எந்த ஒரு விஷயத்தையும் உடனடியாக செய்யாது, நன்கு ஆலோசனை செய்த பின்பு முழு மனதுடன் உறுதியாக செயல்படும்.

கொக்கு ஒடு மீன் ஓட உறு மீன் வரும் வரை காத்து நிற்கும், அது போல் அறிவாளி ஒரு காரியத்தை செய்வதற்கு முன் காலம், இடம், தன் ஆற்றல் கூடும் வரை காத்திருந்து செய்வான்.

களைப்புற்றாலும் கழுதை தன் வேலையை தொடர்ந்து செய்யும், வெயில், மழை என்று பாராமல் உழைக்கும், தன் முதலாளிக்கு கட்டு பட்டிருக்கும். ஆகிய மூன்றும் கழுதையிடம் இருந்து கற்று கொள்ள வேண்டிய விஷயங்கள் ஆகும்.

விடியற்காலை எழுதல், தைரியமாக சண்டையிடுதல், அவர் அவர்க்கு தேவையானவற்றை பிரித்து கொடுத்தல், தனக்கு தேவையானவற்றை தானே உழைத்துத் தேடி சம்பாதித்தல் ஆகிய நான்கும் சேவலிடம் இருந்து கற்று கொள்ள வேண்டிய விஷயங்கள் ஆகும்.

இரவில் மனைவியுடன் சேர்ந்து இருத்தல், தேவையான பொருள்களை சேமித்து வைத்தல், யாரையும் எளிதில் நம்பாமல் இருத்தல், தைரியம், எச்சரிக்கை உணர்வு ஆகிய ஐந்தும் காக்கையிடம் இருந்து கற்று கொள்ள வேண்டிய விஷயங்கள் ஆகும்.

கிடைப்பதை உண்டு திருப்தி அடைதல், உணவு கிடைக்காத நேரத் தில் பட்டினி இருத்தல், நன்றாக பசி இருந்தும் கட்டளை வரும் வரை காத்து இருத்தல், நல்ல தூக்கத்தில் இருந்தாலும் உடனடியாக எழுந்து செயல்படுதல், முதலாளிக்கு விசுவாசமாக இருத்தல், உருவத்தில் பெரிய மிருகமாக இருந்தாலும் தைரியமாக எதிர்த்தல் ஆகிய ஆறு குணங்களை நாயிடம் இருந்து கற்று கொள்ள வேண்டும்.

மாதம் இரண்டு முறை இலவசமாக வெளிவரும் "ஆன்மிகமலர் மெயில் புத்தகம்" பெற உங்கள் இமெயில் முகவரியை கீழ்காணும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்

whats-app no: 7299992699

aanmeegamalar@gmail.com

aanmeegamalar.com இணையதளத்தின் செய்திகளை

dailyhunt

மொபைல் அப்பில் உடனுக்குடன் தெரிந்து கொள்ளலாம்.

ஆன்மிகமலர் மெயில் புத்தகத்தின் அனைத்து புத்தகங்களையும் படித்து மகிழவும் டவுன்லோடு செய்யவும்

www.aanmeegamalar.com

MAGZTER DIGITAL MAGAZINE STORE TAP · READ · ENJOY

இணையதளங்களை பார்க்கவும்...

# திருவண்ணாமலை கிரிவல மகிமை

திருஅண்ணாமலையில் கிரிவலம் சென்றால் செல்பவருடைய அத்தனை பிறவி வடிவங்களும் கூடவே சேர்ந்து வருகின்றன. ஒவ்வொருவரின் ஒட்டு மொத்தப் பிறவிச் சாரமே கூடவே சேர்ந்து அருணாச்சலத்தை வலம் வருமாம்!!!

இதற்குக் காரணம், அத்தனை கோடிப் பிறவிகளுக்கும் முற்றுப்புள்ளி இடும் ஆன்மசாதனமே அண்ணாமலை கிரிவலம் என்பதால்தான்!

நமது பிரபஞ்சத்தில் அருணாச்சலமான திரு அண்ணாமலையில் மட்டுமே இது சாத்தியமாகும். பவுர்ணமி தினம் போன்று மாதசிவராத்திரி நாளிலும் அருணாச்சல கிரிவலத்தைக் கடை பிடிக்க வேண்டும்.

# நாம் செய்யும் தானத்தில் மிகச் சிறந்தது அன்னதானம்

கலியுகத்தில் நம் ஒவ்வொருவருடைய கர்மவினைகளையும் அடியோடு மாற்றும் வல்லமை அன்னதானத்திற்கு உண்டு; கட்டாயப்படுத்தி அன்னதானம் செய்யக் கூடாது; அசைவ அன்னதானம் செய்யக் கூடாது; அரைகுறை மனதுடன் அன்னதானம் செய்யக் கூடாது; நமது குல தெய்வம் கோவிலில் அன்னதானம் செய்யலாம்; உள்ளூர் சிவாலயத்தில் தினமும் அன்னதானம் செய்யலாம்; மிகவும் தலைசிறந்த அன்னதானம், துவாதசி திதி அன்று அண்ணாமலையில் செய்யப்படும் அன்னதானமே!!!

ஒரு தமிழ் ஆண்டில் 8 முதல் 10 முழுத் துவாதசி திதி நாட்கள் மட்டும் தான் வரும்; இந்த நாட் களில் காலை 6 முதல் 7 மணிக்குள் குறைந்தது 18 சாதுக்களுக்கும், மதியம் 1 முதல் 2 மணிக்குள் குறைந்தது 18 சாதுக்களுக்கும்,இரவு 7 முதல் 8 மணிக்குள் குறைந்தது 18 சாதுக் களுக்கும் அன்னதானம் செய்ய வேண்டும்; அதன் பிறகு,கிரிவலம் வரவேண்டும்; இப்படிச் செய்தால் மறுபிறவியில்லாத முக்தி கிட்டும் என்று அருணாச்சல புராணம் தெரிவிக்கின்றது.



# சித்திரா பௌர்ணமி அன்று வெளிவரும் உப்பு

சித்ரா பவுர்ணமியன்று இரவில், ஒரு சில பகுதிகளில் பூமியிலிருந்து ஒருவகை உப்புவெளிப்படும். இதை பூமிநாதம் என்று சொல்வர். இந்த உப்பு, சித்தமருத்துவத்துறையில் முக்கிய இடத்தைப் பெறும் இது மூலிகையிலுள்ள ஜீவசக்திகள் வீரியத்துடன் விளங்க உதவுகிறது. இந்த உப்பு, சித்ரா பவுர்ணமியன்று வெளிப்படுவதை முதன்முதலில் கண்டறிந்தவர்கள் சித்தர்களே.





# மற்றவர்களும் பயன்பெற
# அறிமுகப் படுத்துங்கள்....

அற்புதமான கருத்துக்களைக் கொண்டு வெளிவரும் நமது இதழை உங்களுக்கு தெரிந்த நண்பர்கள், உறவினர்களும் படித்து பயன்பெற, அவர்களுக்கும் அறிமுகப்படுத்துங்கள்.

நமது இதழில் நிறை குறைகளை எங்களுடன் பகிர்ந்து கொள்ளுங்கள்.

உங்கள் கருத்துக்களை கீழ்காணும் தொலைபேசி எண் மற்றும் வாட்சப் எண் மற்றும் இ-மெயில் முகவரியிலும் தெரியப்படுத்தலாம்

**whatsapp: 8825844033**

**aanmeegamalar@gmail.com**

# மின்னூல் வடிவத்தில்

ஆன்மிகமலர் மெயில் புத்தகத்தின்

அனைத்து பிரதிகளையும் படித்து மகிழ...

ஆன்மிகமலர்.காம்

ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

www.aanmeegamalar.com

MAGZTER

DIGITAL MAGAZINE STORE

TAP · READ · ENJOY

இணையதளங்களை பார்க்கவும்...

aanmeegamalar.com

இணையதளத்தின் செய்திகளை

உலகின் அனைத்து

மொழிகளிலும்

செய்திகளைத் தரும்

dailyhunt

மொபைல் அப்பில் உடனுக்குடன்

தெரிந்து கொள்ளலாம்.